

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்
## ஐப்பசி – கார்த்திகை

மலர் 11 நவம்பர் 2022 இதழ் 11

பொருளடக்கம்


ப்ரார்த்தனை 3
ஆசிரியர் பக்கம் 4
வண்டு ஸ்தோத்ரம் 6
பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள்
நீதிக் கதைகள் 9
பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள்
அனுக்கிரஹ பாஷணம் 14
பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள்
ப்ரஹ்மவித் ஆசீர்வாதம் 17
பன்னிரு திருமுறைகளின் தெய்வப் பெற்றி 18
கார்த்திகை தீபத் தத்துவம் 23
முகாம் நிகழ்ச்சிகள் 29
கார்த்திகை மாத விசேஷ தினங்கள் 31
ஸ்ரீ தேவி பாகவதம் 32
சாணக்ய ஸுபாஷிதம் 35
ஸங்கர கீதை 37
மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரி 41
புராணக்கதை 43
மகாபாரத சுருக்கம் 45
ஸனாதன தர்மம் கேள்வி பதில்கள் 47

भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।

Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.

நிர்வாகக் குழு

ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்
டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்







# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

கௌரவ தலைமை ஆசிரியர் :
டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

ஆசிரியர் குழு :

பேராசிரியர் N.வீழிநாதன்
டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்
பேராசிரியர் S. ஸ்ரீநிவாஸ சர்மா
ஸ்ரீ T.N. ராமசந்திரன்
ஸ்ரீ T.S. ராகவன்
பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.
ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா
பேராசிரியர் K. ஸ்ரீநிவாஸன்

வெளியிடுவோர் :
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம்

அலுவலக முகவரி :
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் – 631502.
தொலைபேசி : 044 – 27233115

மின் அஞ்சல் :
kamakotipradeepam@gmail.com

சந்தா விவரம்

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/- |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/- |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/- |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/- |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/- |
| புரவலர் | ரூ. 10000/- |

Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of Sri Kanchi Kamakoti Peetam, No1, Salai Street, Kancheepuram - 631502. Ph : 044 - 27233115.

Periodicity : Monthly.

Printed at : Jai Ganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः।।

कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हतो भवेत्।।

# ப்ரார்த்தனை
# प्रार्थना

அக்னியும் விஷ்ணுவுமாகியவர்களே எங்களிடத்தில் ஒருமித்த அன்பு கனியும் மனமுடையவர்களாய் நீங்களிருவரும் இருக்க வேண்டும். உங்களைத் துதிக்கும் எமது வார்த்தைகள் செழிக்க வேண்டும். நீங்களிருவரும் சகல ஐஸ்வர்யங்களுடனும் உணவுப் பொருள்களுடனும் எங்களை அனுக்ரஹிக்க எழுந்தருள வேண்டும்.

அன்னபானங்கள், அன்னமிடும் மனதும், பரிசுத்தமும், உற்சாகமும், அன்னரக்ஷணமும், எனக்கு வேண்டும். அன்னத்தை ஸம்பாதிக்கும் யாகமும், யாகத்தில் ஸ்வரத்துடன் மந்த்திரங்களை உச்சரிக்கும் சக்தியும், புகழும் எனக்கு வேண்டும். சொல்லும் திறமையும், கேள்வித் திறமையும், உள்ளொளியும், ஸ்வர்க்கமும் எனக்கு வேண்டும். ப்ராணனும், அபானனும், வ்யானனும், உயிரும், சித்தமும், அதால் அறியப்பட்ட பொருளும் எனக்கு வேண்டும். கண், மனம், காது, ஞாநேந்த்ரியங்களின், கர்மேந்த்ரியங்களின் சக்தி எனக்கு வேண்டும். ஓஜஸும், சத்ருக்களை ஜயிக்கும் சக்தியும் எனக்கு வேண்டும். ஆயுளும், மூப்பும், அந்தராத்மாவும், நல்ல உடலும், சுகமும், உடலைக் காக்கும் கவசமும் திடமான அங்கங்களும், எலும்புகளும் கணுக்களும் உடலில் உள்ள எல்லா அவயங்களும் எனக்கு வேண்டும்.

**ஸ்ரீ ருத்ரம் சமகம்**

இந்த ராஷ்ட்ரத்தில் ப்ரம்மவர்சஸ்வீ பிறக்க வேண்டும், இந்த நாட்டில் வில்லாளன் மகாரதன் ஜனிக்க வேண்டும். இங்கு பால் பொழியும் பசு, காளை, துரித குதிரை, சுந்தர ஸ்த்ரீ, ஜய சீல வீரன், சபைக்கு அருகதையான யுவன் ஜனிக்க வேண்டும். இந்த யாகம் செய்யும் யஜமானனுக்கு ஓர் வீரன் ஜனிக்க வேண்டும். பர்ஜன்யன் நாங்கள் வரும் போதெல்லாம் மழை பொழியட்டும். ஓஷதிகள் பலம் பக்குவமாகி பலம் தரட்டும். எங்களுக்கு யோக க்ஷேமம் ஏற்படட்டும்.

**க்ருஷ்ண யஜுர் வேதம்**

# ஆசிரியர் பக்கம்

கடந்த இதழில் நமது தர்மம் பற்றி சில விஷயங்களைப் பார்த்தோம். இந்த இதழில் அதன் முக்ய கோட்பாடுகள் பற்றி பார்ப்போம், விளக்கிக் கொள்வோம். இந்த கோட்பாடுகள் யாராலும் செய்யப்படவில்லை. தானாகவே இறை அருளால் ஏற்பட்டவை. வேதம், தர்ம சாஸ்த்ரங்கள், புராணங்கள், இதிஹாஸங்கள் வழியாக இவை நடை முறையில் இருப்பவை.

1. ஏகம் ஸத் விப்ரா பஹுதா வதந்தி என்னும் கடவுட் கொள்கை, 2. இது ஒன்றே மோக்ஷமார்க்கம் என்று சொல்லாதது, 3. கர்ம சித்தாந்தம், 4. வர்ணாஸ்ரம தர்மம், 5. மத மாற்றம் செய்யாதிருத்தல், 6. வேள்வி, 7. வேதாந்த தர்சனம், 8. விக்ரக ஆராதனை.

***ஏகம் ஸத் விப்ரா பஹுதா வதந்தி*** என்னும் பரந்த அறிவு மற்ற மதங்களை மதிக்கிறது. இந்த மந்த்ர வாக்யம் மத சகிப்புக்குப் பேர் போனது. இதுவே நம் மதத்தின் பலமும், பலவீனமும். ஒன்று பரம்பொருள், ஞானிகள் அதை வேறு வேறாகக் கூறுகிறார்கள் என்னும் இந்த வாக்யம் பொருள் பொதிந்த வாக்யமாகத் திகழ்கிறது.

இந்த மத சகிப்புத்தன்மையால் மற்ற மதங்கள் மூலமாகவும் மோக்ஷ நிலையை அடையலாம் என்னும் பரந்த மனப்பான்மையைக் காட்டும். இதனால் மத மாற்றம் என்னும் செயல் அடிபட்டு விடுகிறது. கர்ம சித்தாந்தம் மிகுந்த அளவில் இது விமர்சிக்கப்பட்ட ஓர் அம்சம். மிக முக்யமானது. பல கேள்விகளுக்கு மற்ற மதங்கள் பதிலளிக்க முடியாமல், இயலாமையால் மௌனம் காக்கும் போது நமது ஸனாதன மதம் கர்ம சித்தாந்தத்தால் சரியான பதிலளிக்கிறது. படைப்பின் ரகசியமே இதன் அடிப்படையில் தான். வாழ்வில் உள்ள ஏற்றத் தாழ்வுகளுக்குக் காரணம் கடவுள் அல்ல, நம் கர்மாக்களே என்று உறுதியுடன் கூறும்.

**வர்ணாஸ்ரம தர்மம் –** இந்த அம்சமும் பலரால் விமர்சிக்கப்படும். உண்மையில் இதன் மூலம் தனி மனித ஒழுங்கும், ஸமுதாய ஒழுங்கும் நிலை பெற்றது. இந்த ஒழுங்கு நிலை குலைய பல ஹானிகள் வந்தன.

மத மாற்றம் நம் மதம் ஒன்றுதான் உயர்ந்தது, மற்ற மதங்கள் தாழ்ந்தவை. எனவே இந்த மதத்தில் சேர்ந்தால் மோக்ஷம் என்று ஆப்ரகாமிய மதங்கள் கோஷமிடும். இதனால் ஏற்பட்ட கட்டாய மத மாற்றம் உலகையே ரத்தக் களரி ஆக்கிற்று என்பது வரலாறு.

ஏகம் ஸத் விப்ரா பஹுதா வதந்தி என்னும் உயர்ந்த பரந்த நோக்கத்துடன் இருக்கும் நமது மதத்தில் மத மாற்றம் என்பது கிடையாது.

பிறப்பு முதல் இறப்பு வரை பல சடங்குகளைச் சொல்லும் நமது மதம் மத மாற்றம் என்பதற்கு எந்த சடங்கையும் கூறாது. அப்படிப்பட்ட நினைப்பே இல்லை எனலாம்.

வேள்வி – இதுவும் நமக்கே உரித்தான ஓரம்சம். உலக நன்மைக்காக யாகத் தீயில் அர்ப்பணிக்கும் பொருள்களினால் தேவர்கள் மகிழ்ந்து பஞ்ச பூதங்கள் மூலமாக மக்களுக்கு நலம் விளைவிப்பர். தொழுகை என்று பல மதங்கள் சொல்வதைத் தாண்டி நம் மதம் சொல்லும் இந்த அம்சம் விசேஷமானது.

நமது – இது – எனது அல்ல இறைவனது என்று கூறி தீயில் இடும் கர்மாவால் பற்றற்ற நிலை எய்தும்.

வேதாந்தப் பார்வை – ஒரே பரம் பொருள்தான் பல ஜீவ ராசிகளாகத் தோன்றுகிறது. பார்ப்பதற்கு, நடை முறையில் பேதம் இருந்தாலும் உண்மையில் எல்லாம், எல்லோரும் பரம்பொருளே. இந்த அம்சம் தான் நம் ஸனாதன மதத்தின் அடி நாதம். இந்த வேதாந்த தர்சனம்தான் இன்னும் பல இன்னல்களிலிருந்து அதைக் காப்பாற்றி வருகிறது. உபநிஷத்துக்கள் தரும் செய்தி இதுதான் என்று பல அறிஞர்கள் கூறுவர்.

‘ஸர்வம் கல்விதம் ப்ரம்ம’ (இது எல்லாம் ப்ரம்மமயம்) ‘புருஷ ஏவ இதம் ஸர்வம்’ இது எல்லாம் அந்த ப்ரம்மமே’’ என்னும் உயர்ந்த கொள்கையை அடிப்படையாக கொண்டது ஸனாதன மதம். அதனால் தான் ஸனாதனமாக உள்ளது. மேலே கூறிய அம்சங்கள் எல்லாம் நமது நூல்கள் அனைத்திலும் இழையாக ஓடிகொண்டிருக்கும்.

ஒரே பரமாத்மா நிர்குணமாயிருந்தாலும் மக்களின் மன நிலைக்கேற்ப ஸகுணமாய் உருவத்துடன் தோன்றுவது. மாற்று மதங்கள் இதை விமர்சித்தாலும் அவைகளும் ஏதோ ஒரு முறையில் உருவ வழிபாடு செய்கின்றன.

இப்படி பல அம்சங்கள் இருந்தாலும் சில விசேஷ அம்சங்களைப் பற்றிப் பார்த்தோம். இந்த அம்சங்களை அலசி ஆராய்ந்தால் பல உண்மைகள் விளங்கும். மேலும் நம் மதம் பற்றி அறிஞர்கள் என்ன கூறுகின்றனர் என்று அடுத்த இதழில் பார்க்கலாம் என்று கூறி இவ்விதழை ஸ்ரீ சரணர்கள் பொற் பாதத்தில் ஸமர்ப்பிக்கிறோம்.

ஜய ஜய சங்கர ! ஹர ஹர சங்கர!

# வண்டு ஸ்தோத்ரம்

**ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்**

# நிர்குணமும் குணநிலயமும்



'தாமோதர குணமந்திர!' என்று ஆறாவது ச்லோகத்தை ஆரம்பிக்கிறார் ஸ்ரீ ஆசார்யாள்.

'தாமோதர' சப்தத்துக்கு முன்பே அர்த்தம் சொன்னேன்.

'குண மந்திர' என்றால் 'குணங்கள் யாவும் குடி கொண்டவனே', என்று அர்த்தம். மந்திரம் என்றால் குடியிருக்கும் இடம். முக்யமாக, பகவான் அர்ச்சா ரூபத்தில் (விக்ரஹ வடிவில்) குடிகொள்ளும் கோயிலை மந்திரம் என்கிறோம். வடக்கே, 'மந்திர்' 'மந்திர்' என்று சொல்கிறார்கள். அனந்த கல்யாண குணங்களும் ஒரு கோயிலாகக் குடி கொண்டிருப்பவனே 'குண மந்திரன்'.

'குணம்' என்பதற்குக் கயிறு என்று ஒரு அர்த்தம். 'தாமோதர' என்ற பெயரில் 'தாம' என்பது கயிற்றைக் குறிப்பிடுவதால், இந்த ஸ்தோத்ரம் பூராவும் சொற்களையும், பொருளையும் Inter-linked ஆக ஒன்றுக்கொன்று தொடர்புள்ளதாகப் பின்னிக் கொண்டு போயிருக்கும் ஆசார்யாள் அடுத்ததாக 'குண மந்திர' என்று போட்டிருப்பதாகவும் வைத்துக் கொள்ளலாம்.

குண மந்திரன் என்றால் அனந்த கல்யாண குண நிலயன்.

அத்வைத சாஸ்த்ரம் அரை குறையாகத் தெரிந்தவர்கள். 'நம் ஆசார்யாள் இப்படி அனந்த கல்யாண குண நிலயனாக பகவானைச் சொல்லி ஸ்தோத்ரம் செய்யலாமா?' என்று கேட்கக்கூடும். ஏனென்றால் சங்கர பகவத்பாதாள் முடிந்த முடிவாக ஸ்தாபித்த

அத்வைத ஸித்தாந்தத்தின் படி ப்ரஹ்மம் அல்லது பரம்பொருள் என்பது நிர்குணமானது தான் - அதாவது, அதற்கு எந்த குணமும் கிடையாது. அதுவேதான் ஜீவாத்மா. ஜீவாத்மாவுக்கு மனஸ் என்று ஒன்று இருக்கிறவரையில் தான் குணங்கள், கார்யங்கள், நாம - ரூபம் (பெயர் - வடிவம்) எல்லாம் உண்டு. ஞான விசாரம் பண்ணிப் பண்ணி மனஸைத் தொலைத்து விட்டால், அப்புறம் நிர்குணமான, ஏக வஸ்துவான ப்ரஹ்மமாகவே ஜீவனும் ஆகிவிடுகிறான். அதுதான் மோக்ஷம். இப்படிப்பட்ட ஸித்தாந்தத்தை அவலம்பித்தவர் (பிடிப்பாகக் கொண்டவர்) பகவத் பாதாள்.

ராமாநுஜாசார்யார், மத்வாசார்யார் போன்றவர்களே ப்ரஹ்மத்தை அனந்த கல்யாண குணம் கொண்ட ஸ்ரீமந் நாராயணன் என்று சொல்பவர்கள். அனந்த கல்யாண குணங்களை அநுபவித்து ஆனந்தப்பட்டுக் கொண்டிருப்பதுதான் அவர்களுடைய ஸித்தாந்தப்படி மோக்ஷம்.

ராமாநுஜாசார்யார், மத்வாசார்யார் போன்றவர்களே ப்ரஹ்மத்தை அனந்த கல்யாண குணம் கொண்ட ஸ்ரீமந் நாராயணன் என்று சொல்பவர்கள். அனந்த கல்யாண குணங்களை அநுபவித்து ஆனந்தப்பட்டுக் கொண்டிருப்பதுதான் அவர்களுடைய ஸித்தாந்தப்படி மோக்ஷம்.

அதாவது சங்கரர் நிர்குண ப்ரஹ்மத்தையும், மத்வ, ராமாநுஜர்கள் ஸகுண ப்ரஹ்மத்தையும் சொன்னவர்கள். இப்போது நம் விஷயத்துக்கு இவ்வளவு போதும்.

நிர்குண ப்ரஹ்மத்தையே சொன்ன பகவத்பாதாள் 'குண மந்திர' என்று கொண்டாடிச் சொல்லலாமா? என்பது கேள்வி.

சொல்லலாம் என்பது பதில். (சங்கர) ஆசார்ய பாஷ்யங்களைப் பார்த்தால் என்ன தெரிகிறது ? முடிவிலே எல்லாம் நிர்குணமாகிறது தான் மோக்ஷம். அதுதான் ஜீவாத்மா பரமாத்மா இரண்டும் ஒன்றாகிவிடுகிற ஸ்வ - ஸ்வரூபம் என்றாலும், இவர்களிலே பரமாத்மாவானவர் மாயா சக்தியினால் ஜீவ - ஜகத்துக்களை உண்டு பண்ணி, நடத்துகிற ஈச்வரனாக இருக்கிறார் என்றும் சொல்கிறார். இந்த ஈச்வரன்தான் ஸகுண ப்ரஹ்மம் என்பது.

ஈச்வரனை வேறாக இருந்து உபாஸித்துப் பெறுகிற ஆனந்தங்களையே ராமாநுஜரும், மத்வரும் சொன்னார்கள். அந்த உபாஸனையையும், ஆனந்தத்தையும் நம் (சங்கர) ஆசார்யாளும் நிறையச் சொல்லியிருக்கிறாரென்பதை இதுவரை 'ஷட்பதீ' க்கு அர்த்தம் கேட்டதிலேயே புரிந்து கொண்டிருப்பீர்கள்.

ஆனால் இந்த உபாஸனையே முதல் படியாகக் கொண்டு, இதிலிருந்து இரண்டாம் படியாக உபாஸகனே உபாஸ்யமாகவும் (உபாஸிக்கப்படும் பொருளாகவும்) ஆகிவிடுகிற நிர்குண அத்வைதத்துக்குப் போக வேண்டும் என்கிறார்.

ஸரி, ஆனால் இப்படி அத்வைதாநுபம் பெற்றுவிட்ட ஞானி எப்போதும் நிர்குணத்திலேயேதான் இருக்கிறானா? அப்படிக் காணோமே! மஹா ஞானிகளும் வெளிலோகத்தில் நிறையக் கார்யங்களை, அநுக்ரஹங்களைச் செய்து கொண்டு தானே இருக்கிறார்கள்? சுக ப்ரம்மத்திலிருந்து, நம் ஆசார்யாளிலிருந்து, ஸதாசிவ ப்ரம்மேந்த்ராள் வரை இப்படித்தானே இருந்திருக்கிறார்கள்? அப்படியானால் ஸமாதியில் அவர்கள் பெற்ற நிர்குண அநுபவம் இவர்களை விட்டுப் போய்விட்டதா?

இதற்கு பதில் என்னவென்றால்: நாம், 'லோகம் தெரியாத நிலைமைதான் ஸமாதி; ஞானி லோக கார்யம் பண்ணும் போது அவனுடைய ஸமாதி கலைந்து விட்டது' என்று சொன்னாலும், வாஸ்தவத்தில் அந்த ஞானி லோகத்தில் கார்யம் பண்ணுவதாக நமக்குத் தெரிகிறபோதும் கூட ஸமாதி நிலையிலேயேதான் இருக்கிறான். நமக்கு அவன் வேலை செய்வதாகத் தோன்றினாலும், அவனுக்கு இந்த எண்ணமோ, நாம் செய்கிறோம் என்கிற கர்த்ருத்வமோ இல்லை. அவனுடைய பழைய தனி மனஸ் போனது போனது தான். அப்புறம் அவன் மூலம் ஈச்வரனே தான் கார்யங்களைப் பண்ணுகிறான்.

இப்படி இவனை லோக ஸங்க்ரஹத்துக்காக (உலக நன்மைக்காக) ஈச்வரனே பல தினுஸாக இயக்கி வைக்கிற போது, அந்த நாம - ரூப ப்ரபஞ்சத்தைப் பண்ணி, நடத்திக் கொண்டிருக்கிற ஸகுண ப்ரஹ்மமான தன்னையும் அவன் ரஸித்து, பக்தி பண்ணும்படியாக ஒரு விளையாட்டுப் பண்ணுகிறான்.

இப்படிப்பட்ட ஞானிக்கு ஸகுண - நிர்குண பேதங்களே அடிப்பட்டுப் போய் ஸகுண ப்ரஹ்ம அநுபவத்திலேயே நிர்குண ப்ரஹ்மாநுபவ ஆனந்தம் தெரிகிறது. இன்னும் சில ஸமயங்களில் இந்த த்வைதமும் (பலவாக இருக்கிற variety யும்) அந்த அத்வைதத்தின் வேஷம் தானே என்ற உணர்வு அவனுக்கு நன்றாக ஸ்திரப்பட்டு விட்டதால், நிர்குணமாக இருக்கிற ஏக சாந்தத்தைவிட இப்படி ஸகல கல்யாண குணமாக இருக்கிற varietyஐத் தான் அநுபவிக்கலாமே என்று கூடத் தோன்றி விடுகிறது.

(தொடரும்)

# நீதிக் கதைகள்

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## வாழ்வியல் வழிமுறை


ஒவ்வொருவரும் காலையில் எழுந்து குளித்து விட்டு நெற்றியில் திருநீறு, சந்தனம், குங்குமம் இட்டுக் கொண்டு, ஆபத் பாந்தவா, அனாத ரட்சகா, என்ற மந்திரத்தைக் குறைந்தது 16 முறையாவது சொல்ல வேண்டும். 108 முறை உச்சரித்தால் ரொம்ப விசேஷம்.

ஆபத் பாந்தவா என்றால் நம்மைக் காப்பவர் என்று அர்த்தம்.

நாம் செல்லும் வழியில் ஏராளமான ஆபத்துகள் வருகின்றன. மனதால் வரும் கஷ்டங்கள், உடம்பால் வரும் கஷ்டங்கள், பொருளாதாரத்தால் வரும் கஷ்டங்கள், பிறரால் நிந்திக்கப்படும் கஷ்டங்கள், இப்படிப் பலவிதமான சோதனைகள் வருகின்றன. இந்த ஆபத்துக்களை எல்லாம் நீக்குவதால் ஆபத் பாந்தவா என்ற மந்திரம் வந்தது.

அனாத ரட்சகா என்றால் இறைவனின் கருணையைக் குறிக்கும்.

ஆடு, மாடுகள் காலையில் எழுந்ததும் அப்படியே நடந்து எங்காவது போய்க் கொண்டேயிருக்கும். அப்படி நாமும் பொறுப்பு இல்லாமல் போகக் கூடாது. நாம் மனிதர்கள் நமக்குக் கடமைகள் வேண்டும்.



வழிமுறைகளுடன் கூடிய வாழ்க்கை வேண்டும். வழிமுறைகள் இல்லாவிட்டால் வாழ்க்கை வீணாகி விடும். வழி தவற விட்டால் எல்லாமே கஷ்டமாகி விடும்.

எல்லோரும் வழிமுறைகளைக் கடைப்பிடித்து வாழ்ந்தால், தலைக்கு வந்தது தலைப்பாகையுடன் போயிற்று என்பது போல ஆபத்துக்கள் வந்தாலும் பாதிப்பு இல்லாமல் போய்விடும்.

எல்லோரும் வாழ்வியல் கடமைகளைக் கடைபிடித்து இறைவனை வழிபட்டு வெற்றி பெற வேண்டும்.

# அறத்தை ஒட்டி வாழ்வோம்

**அகரமுதல எழுத்தெல்லாம்**
**ஆதிபகவன் முதற்றே உலகுƒ.**

அ, ஆ இரண்டு எழுத்துக்களையும் திருவள்ளுவர் முதல் பாட்டிலேயே வைத்து எழுதி இருக்கிறார்.

நாம் எல்லோரும் ஆதிபகவனின் குழந்தைகள். தேவர்களில் உயர்ந்தவன் தேவேந்திரன்.

புருஷர்களுக்குள்ளே உயர்ந்தவன் புருஷோத்தமன். புருஷோத்தமன் என்றால் இறைவன் என்று கூட கீதையில் சொல்லப்பட்டுள்ளது. அதுபோல ஒவ்வொரு மனிதனும் புருஷோத்தமனாக வேண்டும்.

நாம் இறைவனது அருளைப் பெற வேண்டும். நல்ல மனிதனாக மாற வேண்டும்.

ஒவ்வொரு மனிதனும் மேல்நோக்கியே போக வேண்டும். கீழ்நோக்கிப் போகக் கூடாது.

மனிதன் தேவனாக வாழ வேண்டும். மிருகத்தினுடைய குணங்கள் மனிதனிடம் வந்து விடுகிறது. மிருகத்தின் கோபமாவது மறைந்து விடும். ஆனால் மனிதனின் கோபமோ மாறாமல் அப்படியே மனதிற்குள் புதைந்து போயிருக்கும்.

அதனால் தான் **அறம் செய்ய விரும்பு ஆறுவது சினம்ƒ** என்றார்கள்.

கோபம் வந்தால் ஆண்டவனையே குற்றம் சுமத்துகிறான். நான் அவ்வளவு பண்ணியிருக்கிறேன், ஏமாற்றி விட்டாரே.. என்று கடவுளையே கோபிக்க ஆரம்பித்து விடுகிறான்.

சினமானது இயற்கை. நாம் ஒரு விஷயத்திற்காக ஆசைப்படுகிறோம். அது கிடைக்காத போது கோபமாக மாறிவிடுகிறது. ஆசைதான் கோபமாக மாறுகிறது. கோபம் என்று தனியாக ஏதும் கிடையாது.

விரும்பியது கிடைக்காத போது எப்படியாவது அடைந்தே ஆக வேண்டும் என்ற ஆத்திரம் கோபமாக வெளிப்படுகிறது.

எல்லாத் துன்பங்களுக்கும் காரணம் பேராசை. ஆசை இருக்கலாம். இறைவனின் மீது ஆசை வைக்கலாம். ஆனால் பேராசைதான் கூடாது. பேராசை பெருநஷ்டம்.

துராசை, பேராசைதான் அடங்காக் காமத்தை உண்டு பண்ணி, கோபதாபங்களுக்கும் ஆளாக்கி அவனைக் கஷ்டப்படுத்துகிறது. அந்த வகையில் பேராசை இல்லாமல் வாழ்க்கை நடத்துவது

ஒவ்வொருவருக்கும் நல்லது.

அந்தக் காலத்தில் பள்ளிக் கூடங்களிலே ஒண்ணாவது படிக்கும் போது இதுபோன்ற நீதிக்கதைகள் சொல்லப்பட்டன. ஆனால் இப்பொழுது எல்லாம் எந்தப் பள்ளிக் கூடத்திலே என்ன பாடம் சொல்லித் தருகிறார்கள் என்றே தெரியவில்லை. பள்ளிகளில் நீதிக்கதைகளைத் தேட வேண்டியிருக்கிறது.

சமஸ்கிருதத்திலேதான் எல்லா நல்ல விஷயங்களும் இருக்கிறது என்று நினைத்துக் கொண்டிருந்தோம். ஆனால் அதற்குச் சமமாக இப்போது தமிழிலும், எல்லா விஷயங்களிலும் வந்துவிட்டது.

ஒரு மனிதனுடைய வளர்ச்சி என்பது அவனது விஷய வளர்ச்சியை வைத்துதான் கணக்கிடப்படுகிறது.

வடமொழியில்தான் நல்ல விஷயங்கள் இருக்கிறது என்று முன்பு நினைத்துக் கொண்டு இருந்தோம். இப்போது தமிழிலும் திருக்குறள் போன்ற நல்ல நூல்கள் இருப்பது தெரிய வந்திருக்கிறது.

திருக்குறள் பாமாலையிலே அதைப் பற்றி நிறையப் புகழ்ந்து பாடப்பட்டிருக்கிறது.

**உள்ளொன்று வைத்து புறம் ஒன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்***f* என்று ஒரு பெரியவர் சொன்னார்.

வாயிலிருந்து வருவது எல்லாமே பொய்யாக இருப்பதற்கு எந்த ஒரு மொழியும் பயன்படக் கூடாது.

தமிழ் ஒரு நல்ல மொழி. அந்த நன்மொழியிலுள்ள கதைகளையெல்லாம் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

வடமொழியில் உள்ள எத்தனையோ தர்ம சாஸ்திரங்கள் எல்லாம் இன்றைக்குத் தமிழிலும் வந்துள்ளது. அந்தப் பெருமை நமக்கு உள்ளது. அதை மனதில் கொண்டு, குழந்தைகளுக்கும் சொல்லிக் கொடுத்தால் பண்பாடு மிக்கவர்களாக வளர்வோம்.

மனிதன் தேவனாக ஆகாவிட்டாலும் பரவாயில்லை. குறைந்தபட்சம் அவன் மிருகமாக்கப்படாமலாவது பாதுகாக்கப்பட வேண்டும். பண்போடும் வாழ, இலக்கியங்களைப் படிக்க வேண்டும்.

ஒன்றரை அடியுள்ள திருக்குறளில் உள்ள நல்ல விஷயங்களைப் படித்து வாழ்க்கையில் நடைமுறைப்படுத்த வேண்டும். பள்ளி ஆசிரியர்கள் இந்த விஷயங்களை தாங்கள் கிரகித்துக் கொண்டு மாணவர்களுக்குச் சொல்லித் தர வேண்டும்.

கிறித்தவர்களும், முஸ்லீம்களும் அவரவர் மதக் கொள்கைகளை அவரவர் வேத நூல்களில் சொல்லி வருகிறார்கள்.

அதுபோல நாம் நம் மதக் கொள்கைகளைச் சொல்லா விட்டாலும் நீதிக்கதைகளையாவது சொல்லி வர வேண்டும்.

நீதி போதனைகள் பரவ எல்லோரும் ஒரு மனதாக ஒத்துழைப்புத் தர முன்வர வேண்டும்.

அந்தக் காலத்தில் ஆறுமுக நாவலர் என்பவர் ஆறாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை பள்ளிப் பாடங்களை எழுதியுள்ளார்.

நாகர்கோவில், கன்னியாகுமரி பக்கத்தில் போட்டிகள் வைத்து, குழந்தைகளைப் படிக்க வைப்பார்கள். அப்படி உற்சாசப்படுத்திய காலம் ஒன்று உண்டு.

பிள்ளைகளை நல்ல முறையில் வளர்க்க வேண்டும் என்பதில் பேராசை வைக்க வேண்டும். மற்ற விஷயங்களில் பேராசை வைக்கக் கூடாது.

நல்ல பேராசைகள் நிறைவேறும். எல்லோரும் அறத்திலே நின்று அறத்திலேயே வாழ்ந்து அறத்தினை வளர்க்க வேண்டும் என்று ஆசைப்படுகிறோம்.

## சேவை புண்ணியத்தைக் கொடுக்கும்

பாரதிய வித்யா பவனம் வெகுகாலமாகச் சேவை செய்து சமஸ்கிருதி உற்சாகத்துடன் நூற்றுக்கணக்கான படைப்புகளை வழங்கிய பதிப்பகம். கல்வி, பாட்டு, நடனம், அரங்கம், இயல், இசை, நாடகம் என்றும் பள்ளி, கல்லூரி என்றும் எதிர்காலத்திற்கு வழிவகுத்து உழைத்து வருகிறது பாரதிய வித்யாபவன்.

பவனம் என்றால் சுந்தர பவனம் நல்ல காரியங்கள் செய்வதற்குரிய நிறுவனம்.

வித்யா என்றால் கல்வி.

பாரதீய வித்யா என்றால் - பாரதீய சம்ஸ்கிருதிகளை எல்லாம் செய்து கொண்டு வருகிறது.

அமெரிக்காவிலே இருக்கும் பில்கேட்ஸ் என்ற பிரசித்தி பெற்ற மனிதர் பாரதிய வித்யா பவனுக்கு கம்ப்யூட்டர்கள் வாங்கிக் கொடுத்திருக்கிறார். அதன் மூலம் கம்ப்யூட்டர் கல்வி வழங்கப்படுகிறது.

புத்தி சம்பந்தப்பட்டது, விஞ்ஞானம், கலாச்சாரம், பூஜை, புனஸ்காரம், நடனம், பாட்டு, சம்பந்தப்பட்டது.

சுதேச சமஸ்கிருதி..... சுதேச விஞ்ஞானம். இந்த இரண்டும் சேர்ந்து செயல்படும் போது பூரணத்துவம் வரும்.

இன்றைக்கு ஹோட்டல்களிலிருந்து அணியும் ஆடைகளிலிருந்து எல்லாவற்றிலுமே விதேச சமஸ்கிருதி தாராளமாக வந்து கொண்டிருக்கிறது.

விதேச சமஸ்கிருதி வந்தால் சுதந்திரம் கிட்டியதின் அர்த்தமே இல்லை.

ஐம்பது வருடங்களாகியும், இன்றும் விதேசி சம்ஸ்கிருதி இருந்தால் எப்படி?

நம்முடைய சம்ஸ்கிருதியோடு விஞ்ஞான வளர்ச்சி இருப்பது காலத்தின் லட்சியம். அப்போது தான் சுதந்திரம் கிட்டியதன் லட்சியம் சித்திக்கும்.

அதுபோன்ற காரியங்களை எல்லாம் பாரதிய வித்யா பவன் செய்து வருகிறது.

காஞ்சிக்கும், கேரளாவிற்கும் ரொம்பச் சம்பந்தம். கேரளத்திலே ஆதிசங்கரர் அவதரித்தார். தேசம் முழுக்க யாத்திரை செய்து, சனாதன தர்மத்தையும், சாஸ்திர தர்மத்தையும் பிரசங்கம் பண்ணினார்.

பிறகு காஞ்சியிலே வந்து ஒரு ஸ்தாபனத்தை நிறுவினார். அப்போது முதல் கேரளத்துக்கும் காஞ்சிக்கும் ஒரு சம்பந்தம் ஏற்பட்டது. ஆதிசங்கரரோடு ஆச்சாரமான ஒரு சம்பந்தம் கொண்டு இருக்கிறது.

அதுகொண்டு கேரளத்திலே நிறைய க்ஷேத்திரங்கள் உண்டாகி, அதன் பொருட்டு நம்முடைய சம்ஸ்கிருதங்களும் வளர ஆரம்பித்தன.

க்ஷேத்திரங்கள் இல்லாவிட்டால் சம்ஸ்கிருதங்களும் இல்லை. கலாச்சாரமும் இல்லை. க்ஷேத்திரங்களை ஒட்டியே நம்முடைய சம்ஸ்கிருதங்களும் வளர்ந்தன.

கேரளத்தில் உள்ள மகா விசேஷம் என்னவென்றால், என்ன கலாச்சாரமாக இருக்கட்டும், அது சம்ஸ்கிருதியை முன்னிட்டுதான் வளரும்.

அப்படிப்பட்ட பரம்பரா சம்ஸ்கிருதியை ரட்சிக்கும் கேரளத்திலே, கொச்சின் எர்ணாகுளத்திலே பாரதீய வித்யாபவன் செய்யும் சேவைகள் ரொம்பவும் விசேஷமானது.

எல்லாப் பிரேமிகளும், வித்யாப் பிரேமிகளும், சம்ஸ்கிருதிப் பிரேமிகளும் ஒன்றுசேர்ந்து, இதுபோன்ற நல்ல நல்ல காரியங்களைச் செய்து, மென்மேலும் இந்த ஸ்தாபனம் உயர்ந்து விளங்க வேண்டும் என்று எல்லோரும் பிரயாசை செய்து சேவை புரிய வேண்டும்.

சொர்ணம், வெள்ளி, பணம் எல்லாம் லாக்கரில் வைத்தால் பாதுகாப்பு.

ஆனால் தர்ம லட்சணம் லாக்கரில் அல்ல! தர்ம லட்சணம் நம்முடைய ஜீவிதத்திலே கிட்டணும். ஜீவிதத்திலே எப்போ தர்ம லட்சணம் வருமோ அப்போதுதான் தர்ம தேவதாவின் அனுக்கிரகத்தினாலே நாமும் ரட்சிக்கப்படுவோம். நம்முடைய தேசமும் ரட்சிக்கப்படும். அதுதான்

**தர்மோ ரக்ஷதி ரக்ஷித**

**பரோபகாரம் புண்ணியாய பாபாய....**

# அனுக்கிரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## நவராத்திரி முன்னிட்டு பெரியவா அவர்களின் அருளுரை

*25/09/2022 - முகாம் - பெத்தாபுரம்*

**''ராத்ரி ரூபா யசோதேவி திவா ரூபோ மகேஸ்வரஹ:''**



என்று சொல்லக் கூடிய அந்த நவராத்ரி விழாவை, இரவு உருவத்திலே அந்த அம்பாள் இருக்கிறாள். ஆக **''ராத்ரி ரூபா யசோதேவி திவா ரூபோ மகேஸ்வரஹ: ''** என்று சொல்வார்கள். அந்த நவராத்திரி பூஜையை நல்ல சங்கல்பத்துடன் செய்து கொண்டாட வேண்டும்.

அப்படி இந்த நவராத்திரி விழா சமயத்தில் கோ பூஜை, கஜ பூஜை . அஸ்வ பூஜை துர்கா, லக்ஷ்மி, சரஸ்வதி பூஜை எல்லாம் செய்து, கன்னிகா பூஜை, சுவாசினி பூஜை, பிரம்மச்சாரி பூஜை செய்து- **கன்யா பூஜன ஸுப்ரஜன்ன ஹ்ருதயாம்** - என்பதாக ஆச்சாரியாள், ப்ரமராம்பா அஷ்டகத்தில் கூறுகிறார். ஸ்ரீ சைல பிரமராம்பா அஷ்டக ஸ்தோத்திரத்திலே. பெரியவா கன்யா பூஜையெல்லாம் ரொம்ப செய்திருக்கா. பூஜையெல்லாம் முடிந்து, அவா கன்னிகா பூஜையெல்லாம் பண்ணிருக்கா. இதை விட வேற கௌரவம் என்ன இருக்க முடியும்?

கொடுப்பதற்கு மனதும் வேண்டும், சக்தியும் வேண்டும். அந்த மனமும், சக்தியும் ஒரு சேர இருப்பது அம்பாளிடம். அதனால் அந்த அம்பாளின் கருணா கடாக்ஷம் பிரவாகமாக வந்து கொண்டு இருக்கிறது. ஜீவ நதியில் இருக்கக் கூடிய பிரவாகம் போன்று. காட்டாற்றில் பிரவாகம் வரும். மலையில் திடீரென்று ஒன்றரை மாதம் ஓடும். இன்னும் வேகமாகவே ஓடும். அப்படி, இந்த அம்பாளின் கருணா-கடாக்ஷப் பிரவாகமானது,

நம்முடைய கோரிக்கைகளை நிறைவேற்றக் கூடியதாக உள்ளது.

श्यामा काचन चन्द्रिका त्रिभुवने पुण्यात्मनामानने
सीमाशून्यकवित्ववर्षजननी या कापि कादम्बिनी ।
माराराातिमनोविमोहनविधौ काचितत्तमःकन्दली
कामाक्ष्याः करुणाकटाक्षलहरी कामाय मे कल्पताम् ।।

வேதத்திலே சொல்றா - **நீலதோய மத்யஸ்தா வித்யுல்லேகேவ**

**நீலதோய மதயஸ்தா வித்யுல்லேகேவ** - கருப்பான கரு மேகத்தில் இருந்து இந்த மின்னல், எப்படி வெள்ளையா இருக்கோ, பிரகாசமாக இருக்கோ, அப்படி இருக்கு என்று சொன்னா. அந்த மாதிரி, பார்பதற்கு வெள்ளை இல்லாமல் இருந்தாலும், அந்த அம்பாளின் ஸ்வரூபத்தில் இருந்து, ஒரு சந்த்ரிகா, ஒரு வெளுப்பு - அது ஞான ரூபமான வெளுப்பு, ஆனந்தத்தை அளிக்கக் கூடிய வெளுப்பு, காம ஷமனம் , வெய்யிலின் உக்ரத்தை தணிக்கக் கூடிய அந்த வெளுப்பு. வெளுப்பில் கூட உஷ்ணம் உண்டு. ஆனால், இந்த வெளுப்பு என்பது ஆபத்தை ஷ்மனம் செய்யக் கூடிய இந்த வெளுப்பு. அந்த அம்பாளைப் பற்றி எத்தனையோ பேர் வந்து ஸ்தோத்திரம் பண்ணிருக்கா.

जय जय जगदम्ब शिवे जय जय कामाक्षि जय जयाद्रिसुते ।
जय जय महेशदयिते जय जय चिद्गगनकौमुदीधारे ।।

முதல் வாக்கியத்திலே ஜகதம்பா என்று சொல்லப்பட்டிருக்கிறது. உலகத்திற்கு எல்லாம் தாயாக விளங்குபவள் ஜகதம்பாள் என்பதாலே, மாத்ரு பாவம் வெளிப் படுகிறது.

ஜய (ஜயாத்ரி)ஸுதே. ஒரு கன்னிகையாக அம்பாள் தபஸ் பண்ணிய நிலை. இமவானின் புத்திரியாக, பர்வத ராஜ குமாரியாக, குமாரியாக இருந்த நிலையிலே தபஸ்க்காக சென்ற அந்த உயர்ந்த குணம், மனோபாவம் இதிலே வெளிப்படுகிறது. பஞ்சாக்னி தபஸ் செய்த காமாக்ஷியின் திவ்ய ஸ்வரூபம் அந்த அக்னி ஸ்வரூபம் வெளிப்படுகிறது.


ஜெய ஜெய மகேஸதயிதே தபஸ் மூலமாக அந்த அர்த்த நாரீஸ்வரியாக விளங்கக் கூடிய ஜகன் மாதாவாக விளங்கக்கூடியது மூன்றாவது வரியினால் உணர்த்தப்படுகிறது.

*ஜய ஜய மஹேஸதயிதே - அதாவது அம்பாள் பரமேஸ்வரனுக்கு தர்மபத்தினியாக -இதெல்லாம் லௌகீக ஸ்வரூபங்கள். ஆத்யாத்மமான ஸ்வரூபங்கள் என்னவென்றால், அதாவது அம்பாளின் லௌகீகமான ஸ்வரூபம் என்றால் - பொன் , பொருள், பூமி, படிப்பு எல்லாம் கொடுக்கக் கூடிய அம்பாள். அம்பாளின் ஆத்யாத்மிக ஸ்வரூபம் என்னவென்றால், உண்மையான ஸ்வரூபம் என்ன என்றால், ஞானம். ஞானத்தையும் அளிப்பவள் அம்பாள். ஞானப் பிரசுன்னாம்பிகா என்று அம்பாளுக்குப் பெயர். நான்காவது வரியினாலே -* **சித்தகன கௌமுதீதாரே** *- ஞானப்பிரசுன்னாம்பிகை, தேவர்களுக்கெல்லாம் ஞானத்தை வழங்கியவள், அனுக்ரகம் செய்தவள் அம்பாள். சர்வ சக்தியா விளங்குபவள் அம்பாள். ஞான சக்தியாக விளங்குபவள் அம்பாள். அதை, இந்த நாலாவது வரியிலே கூறப்படுகிறது.*

*இப்படியாக பூர்ண ஞானத்தை அளிக்கக் கூடியவளான இந்த காமாட்சியை இந்த மூக பஞ்ச சதி ஸ்தோத்திரம் மூலமாக நாம் பாராயணம் செய்து, அந்த அம்பாளின் அனுக்ரகம் அனைவருக்கும் கிடைப்பதற்கு பிரார்த்திப்போம்.*


ஸ்ரீ சந்திரமௌலீஸ்வராய நம:

## ஸ்வர்ண ரத சேவா



ஸ்ரீ மடத்தில் ஸ்வர்ண ரத சேவை ஸ்ரீ மஹா ஸ்வாமிகள் பிருந்தாவனத்தில் ப்ரதி மாதம் கீழ்கண்ட நக்ஷத்ரங்களில் நடைபெறும்

♦ அனுஷம் ♦ மூலம் ♦ உத்ராடம் ♦ அவிட்டம்

இந்த சேவையில் ரூபாய் 1000 செலுத்தி உபயதாரர்களாக கலந்துகொள்ள விரும்பும் பக்தர்கள் ஸ்ரீமடம் அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புக்கு:**
ஸ்ரீமடம் மேனேஜர் - 044 - 27222115, 27222707, 27224236

இப்படிக்கு,
ஸ்ரீமடம் நிர்வாகம்

# ப்ரஹ்மவித் ஆசீர்வாதம்

ஸ்ரீ வித்யாரண்ய ஸ்வாமிகள்

பி. ஆர். கண்ணன்

ஒவ்வொரு வாக்யம் முடிந்தவுடன் **ஸ்ரீ சரணா: அனுக்ருண்ணந்து**
என்று சிஷ்யர்கள் கூறுவது ஸ்ரீ மடத்து ஸம்ப்ரதாயம்.

**அசித்ரூபஸ்ய ஜகத்; சித் ஸன்னிதே: வித்யாமானத்வாத் சித்ரூபாத்மா ஸர்வகத இதி ஸர்வகதானுபவ ஸித்தி: ஸம்யக் பூயாத் ॥ 46**

*சைதன்யமில்லாத அசித்ரூபமான ஜகத்தில் சித் ஸன்னிதியில் இருப்பதால் சித்ரூபமான எங்குமிருக்கும் ஆத்மஸித்தி எனக்கு நன்றாக இருக்கட்டும்.*

**ஸர்வார்தஸாதக ஹேதுனா ஸர்வ ஸம்பந்தேன ச ஆத்மா பரிபூர்ண இதி பரிபூர்ண ஆத்மானுபவ: ஸம்யக் பூயாத் ॥ 47**

*ஆத்மா எங்குமிருப்பது. பரிபூர்ணமானது, அந்த பரிபூர்ண ஆத்மானுபவம் நன்றாக இருக்கட்டும்.*

**தேசகாலவ்யவஹித்வேன பரோக்ஷஹேதோரபாவாத் ஸாதன அந்தர நிரபேக்ஷதயா ஸ்வயம்ப்ர்காசமான: சிதாத்மா ஸர்வதா ஸ்வதஸித்தி அபரோக்ஷ இதி அபரோக்ஷ அனுபவஸித்தி: ஸம்யக் பூயாத் ॥ 48 ॥**

*தேசத்தாலும், காலத்தாலும், பிரிந்து பரோக்ஷமாயிருந்து தோன்றினாலும், ஸ்வயம்ப்ரகாசமாகவும் ஸ்வத சித்தியாய் இருப்பதாலும் நேருக்கு நேர் (அபரோக்ஷமாய்) உணரப்படுவதாலும், அந்த அபரோக்ஷ அனுபவ ஸித்தி எனக்கு நன்கு எற்படட்டும்.*

**யத்ர யத் வஸ்து அஸ்தீதி ஈக்ஷதே தேன வஸ்துனா அன்யத்ர அனன்வகதத்வேன ஆத்மா அஸங்க இதி அஸம்ஸர்காத்மானுபவ: ஸம்யக் பூயாத் ॥ 49**

*ஒரு பொருள் உள்ளது. பார்க்கிறது. அதனால் அஸங்கனாயிருந்து கொண்டு எதிலும் சேராது இருந்து கொண்டும் இருக்கும் ஸேர்க்கையில்லா ஆத்மானுபவம் எனக்கு ஸித்திக்கட்டும்.*

*(தொடரும்)*

# பன்னிரு திருமுறைகளின் தெய்வப் பெற்றி !

ஸ்ரீ நு. மகாலிங்கம் B.A.

எல்லாம் வல்ல முழுமுதற் பெருமானாகிய சிவபெருமானை தீந்தமிழ்ப் பனுவல்களால் 27 அருளாளர்கள் பாடிய பாடல்களே திருநெறிய தமிழ் எனப்படும் பன்னிரு திருமுறைகளாகும்.

சைவ சமயகுரவரர்கள் நால்வருள், முதல்வரான திருஞான சம்பந்த சுவாமிகளின் பாடல்கள் (4154) முதல் மூன்று திருமுறைகள் ஆகும். இதற்குத் திருக்கடைக்காப்பு (3066) நான்கு, ஐந்து, ஆறு திருமுறைகளாகும். இவற்றிற்குத் தேவாரம் என்று பெயர். அவற்றுள் 6வது திருமுறை திருத்தாண்டகமாகும். முதல் முதல் திருத்தாண்டகம் பாடிய பெருமை அப்பர் சுவாமிகளுக்கே உரியது. அதனால் அவரை தாண்டவ வேந்தர் தாண்டகச் சதுரர் என்று போற்றுவர். அவ்வன் தொண்டர் எனப்படும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடிய பாடல்களுக்கு (1026) திருப்பாட்டு என்று பெயர். அவைகள் ஏழாந் திருமுறையாக வகுக்கப்பட்டுள்ளது. எட்டாம் திருமுறை மாணிக்கவாசகர் பாடிய திருவாசகமும் (656) திருக்கோவையாகும் (400). இவருடைய பாடல்களைக் கூத்தப் பெருமானாகிய நடராசப் பெருமான் தன் திருக்கரத்தால் எழுதி அழகிய சிற்றம்பலமுடையான் எனக் கைச் சாத்திட்டு திருச்சிற்றம்பலத்தில் வைத்ததாகக் கூறுவர்.

திருமாளிகைத் தேவர் முதலிய ஒன்பதின்மர் அருளியவை திரு விசைப்பா (289) ஆகும். சேந்தனார் பாடிய திருப்பல்லாண்டு, 13 பாடல்களைக் கொண்டது. இவை 9ஆம் திருமுறையாகும். திருமூல நாயனார் அருளிச் செய்த திருமந்திரம், மூவாயிரம் பாடல்களாகும். இது தோத்திரம் மட்டுமின்றி சாத்திர நூலாகும். இது 10ஆம் திருமுறையாக வகுக்கப்பட்டுள்ளது.

பன்னிரு ஆசிரியர்கள் அருளிய நாற்பது பிரபந்தங்கள் (1388 பாடல்கள்) பதினொன்றாம் திருமுறையாகும்.

குன்றை முனியாகிய தெய்வச் சேக்கிழார் பல்வேறு நிறத்துச் சிவனடியார்களின் வரலாற்றை, ஒரே காவியமாக ஆக்கி திருத்தொண்டர் மாக்கதை என்று பேரிட்டார். இது பெரியபுராணம் என வழங்கப் பெறுகிறது. (4253 பாடல்கள்) மேற்கூறிய பதினொரு திருமுறைகளையும் நன்கு உணர பெரியபுராணம் துணை செய்யும். இது பன்னிரண்டாம் திருமுறை.

முதல் திருமுறையில் முதல் பாடலான தோடுடைய செவியன் 'த' கர ஒற்றுடன் கூடிய 'ஓ' காரத்தில் தொடங்கி பன்னிரண்டாந் திருமுறையாகிய பெரிய புராணத்தில் கடைசிப் பாடலில் உலகெலாம் என்று முடிவதால் பன்னிரு திருமுறைகளும் ஓங்காரத்தின் உட்பொருள் விரித்துரைப்பனவாக அமைகின்றன.

திருமுறைப் பாடல்கள் தெய்வத்தன்மை உடையன. அவை மற்றப் பாடல்களைப் போல் எண்ணிப் பார்த்துப் பாடப்பட்டவை அல்ல. திருஞான சம்பந்தர் ஞானப் பாலை உண்டபின் திருவருள் உள் நின்று உணர்த்தப் பாடப்பட்டவை. எனதுரை தனதுரையாகக் கொண்டன் என்பது ஞானசம்பந்தர் வாக்கு. மற்ற திருமுறை ஆசிரியர்களும் தங்கள் முயற்சியின்றி இறையளருளால் உந்தப்பட்டே பாடல்கள் அருளியுள்ளனர்.

திருஞான சம்பந்தர் தமது 3-வது ஆண்டிலேயே, பல அற்புதப் பதிகங்களைப் பாடி செயற்கரிய செயல்கள் பல செய்துள்ளார். பெருமானிடமிருந்து பொற்றாளாம், முத்துப்பந்தல், முத்துச்சிவிகை, முத்துக்குடை, உலவாக்கிழி முதலியன பெற்றார். திருவீழிமிழலையில் வற்கடம் (பஞ்சம்) ஏற்பட்ட போது இறைவனிடம் நாள்தோறும் படிக்காசு பெற்று மக்களின் பசிப்பிணியைப் போக்கியருளினார். திருமறைக் காட்டில் அடைக்கப்பட்டிருந்த வாயிற் கதவினை, திருநாவுக்கரசர் பாடித்திறக்கச் செய்தார். இவர் பதிகம் பாடி மீண்டும் மூடச் செய்தார். திருமருகலில் அரவந்தீண்டி இறந்த வணிகனைப் பதிகம் பாடி உயிர்ப்பித்தார். ஆண் பனைகளைப் பெண் பனைகளாக ஆக்கினார். கொல்லி மழவன் என்ற அரசனின் மகளுக்கு ஏற்பட்ட முயலகன் என்னும் நோயைப் பதிகம்பாடித் தீர்த்தருளினார். பாம்பு கடித்து இறந்து போன பூம்பாவையின் சாம்பலும், எலும்பும் இருந்த குடத்தைப் பதிகம் பாடி பாவையாக எழச் செய்தார். கூன் பாண்டியனது வெப்பு நோயைப் போக்கி, அவனது

கூனையும் நிமிர்த்தினார். சமணர்களுடன் நடந்த அனல், புனல் வாதங்களில் வெற்றி கண்டார். தமது 16-ஆம் வயதில் திருநல்லூர்ப் பெருமணத்தில் (ஆச்சாள்புரம்) வந்திருந்த அத்துணைப் பேரையும் சிற்சோதியில் கலக்கச் செய்து முக்தியருளினார்.

திருநாவுக்கரசர், அரவம் தீண்டி இறந்த அப்பூதி அடிகளாரின் மூத்த மகனைப் பதிகம் பாடி பிழைப்பித்தார். திருவையாற்றில் கயிலைக் காட்சியைக் கண்டார். பல்லவ மன்னன் இவரைக் கல்லைக்கட்டி கடலில் எறிந்ததும் **சொற்றுணை வேதியன்** என்ற பதிகம் பாடவே, கல் தெப்பமாக மிதந்தது.

வன்தொண்டர் என்று போற்றப்படும் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கும், பரவையாருக்கும் உற்ற ஊடலை, சுந்தரர் வேண்டுகோளுக்கிணங்கி, பரவையார் பால் நள்ளிரவில் ஒருமுறைக்கு இருமுறை சென்று, தீர்த்தருளினார் சிவபெருமான். இறைவனிடம் பெற்ற பொன்னை, மணிமுத்தாற்றில் போட்டு, பிறகு திருவாரூர் குளத்தில் எடுத்தார். அவிநாசியில் பல ஆண்டுகளுக்கு முன், முதலை உண்ட அந்தணச் சிறுவனை காலனைப் பிள்ளை தரச் சொல் என்று பாடி, வளர்ச்சியோடு கூடிய சிறுவனை வரச் செய்தார். திருவஞ்சைக் களத்தில் தன்னை கயிலைக்கு அழைத்துக் கொள்ளும்படி இறைவனிடம் விண்ணபிக்க, இறைவன் வெள்ளை யானையை அனுப்ப, சுந்தரர் அதன் மீதேறி முனிவர்களும், தேவர்களும் தொழக் கயிலையைச் சேர்ந்தார்.

திருவாதவூரராகிய மணிவாசகப் பெருமானின் திருவாசகம், கல்லையும் உருக்கும் தன்மை வாய்ந்தது. திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார் என்பது ஆன்றோர் வாக்கு. இவர் பொருட்டு சிவபிரான் காட்டிலுள்ள நரிகளைப் பரிகளாக்கி குதிரைச் சேவகனாகப் பாண்டியன் முன் வந்தருளினார். பிட்டுக்கு மண் சுமந்து பாண்டியனிடம் பிரம்படியும் பட்டார். **பூசுவதும் வெண்ணீறு** என்னும் திருப்பாடலைப் பாடி ஊமைப் பெண்ணைப் பேச வைத்தார். திருக்கழுக்குன்றத்தில் இறைவனது காணொணாக் கோலத்தைக் கண்டுக் களித்தார். மணிவாசகர் தில்லையை அடைந்த போது கூத்தப்பெருமான், அவரைத் திருவாசகத்தையும் திருக் கோவையாரையும் பாடும்படி சொல்ல, அவரும் பாட, அவைகளைத் தம் திருக்கரத்தால் எழுதி அழகிய

திருச்சிற்றம்பலமுடையான் என்று கைச் சாத்திட்டு திருச்சிற்றம்பலத்தில் வைத்து மறைந்தருளினார்.

திருமுறைகளில் ஆங்காங்கே சைவசித்தாந்தக் கருத்துக்கள் விரவி இருந்த போதிலும், அவற்றை ஒழுங்குற நூலாகத் தொகுத்துக் கொடுத்த பெற்றி, சந்தான குரவர்களையே சாரும். சமயகுரவர்கள் நால்வர் அமைந்தது போல, சந்தான குரவர்களும் நால்வராக அமைந்தனர். இவர்கள் 14 சாத்திர நூல்களை அருளினர். இரண்டாண்டு குழந்தையாகிய மெய்கண்ட தேவர் சிவஞான போதம் என்னும் அரிய நூலை அருளினார். அதற்கு சிவஞான முனிவர் மாபாஷ்யம் (பேருரை) எழுதியுள்ளார். சாத்திரக் கருத்துக்களை நன்கு உணர, இது பெருந்துணையாக உள்ளது.

நால்வர் ருெமக்களின் வாக்குகள் தெய்வீகமானவை. அவைகள் மேற்கூறிய பல அற்புதங்களைச் செய்தன. இவ்வற்புதங்கள் போல, நாம் வேறெங்கும் காணல் அரிது. நால்வரும் சிறந்த கோட்பாடு உடையவர்கள். இறைவனைத் தவிர வேறொருவரையும் நாடாதவர்கள் எது வேண்டினும் அவன் ஒருவனையே நாடிப் பெறுவர். **இடுக்கண் பட்டிருக்கினும் இரந்து யாரையும் விடுக்கிற் பிரானென்று வினவுவோமல்லோம்** என்பது அப்பர் பெருமானின் திருவாக்கு. பொன்னும், பொருளும் இறைவனை வேண்டிப் பெற்றதோடு, தமக்கு வேலைக்கு ஆட்கள் தேவைப்பட்டபோது இறைவனை வேண்டியே பெற்றார் சுந்தரர்.

**கோளிலி எம்பெருமான் குண்டையூர்ச்சில நெல்லுப் பெற்றேன் - ஆளிலை எம்பெருமான்**
**இவை அட்டித்தரப்பணியே**

குண்டையூர்க்கீழார் கொடுத்த நெல்லை, திருவாரூருக்குக் கொண்டு செல்வதற்கான ஆட்களை, கோளிலிப் பெருமானை வேண்டிப் பெற்றார். எம்பெருமானைத் தவிர பிறரை வேண்டாத பெற்றியர். திருமுறைகள் தெய்வப் பெற்றியை உடையவை. ஆகையால் ஓதுவதோடு வழிபடத் தக்கதாகவும் உள்ளன.

தெய்வப் பெற்றி நிறைந்த திருமுறைகளில் இறைவன் ஒருவனைத் தவிர வேறு எவரையும் புகழ்தல் சிறிதும் இல்லை. இத்தகைய சீரும், சிறப்பும், தெய்வீகமும் பொருந்த *18351* திருமுறைப் பாடல்கள்

கிடைத்துள்ளன. இத்தகைய பெருஞ்செல்வம் யாண்டும் காண்கிடைக்கிலம். இவைகளைப் போற்றி நற்பயனடையாது வேறு நெறிமுறைகளை நாடுவது இழுக்காகும். இனியேனும் திருமுறைகளின் பெருமையை உணர்ந்து நாடெல்லாம் பரவச் செய்து நல்வாழ்வு பெறுவோமாக.

வாழ்க பன்னிரு திருமுறைகள் !

மேன்கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம் !

**வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்**
**வீழ்க தன்புனல் வேந்தனும் ஓங்குக !**
**ஆழ்க தீயதெலாம் அரன் நாமமே**
**சூழ்க வையமும் துயர் தீர்கவே !**

திருச்சிற்றம்பலம்

ஜய ஜய சங்கர உ ஹர ஹர சங்கர

ஸ்ரீ

தர்மோ ரக்ஷதி ரக்ஷித:

# ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

## சீடர்களின் கவனத்திற்கு

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் சீடர்களாகிய நாம் நமது குடும்பத்தில் அவ்வப்பொழுது நடைபெறும் சுபநிகழ்ச்சிகளுக்கு பத்திரிகைகள் தயார் செய்யும்போது கீழ்க்கண்ட வாசகங்களை முதலில் அமைப்பது சாலச்சிறந்ததாகும்.

‘‘ஸ்ரீ மஹா த்ரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திர மௌலீஸ்வர ஸ்வாமி க்ருபையுடன்,
ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் பரம்பராகத மூலாம்நாய ஸர்வக்ஞபீடம்
ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சங்கராச்சார்ய
ஸ்வாமிகள் பரிபூரண அனுக்ரஹத்துடன்

# கார்த்தீகை தீப தத்துவம்

கார்த்திகைப் பண்டிகையன்று நிறைய அகல் ஏற்றி வைக்கிறோமல்லவா? இப்படி தீபத்தை ஏற்றும் போது ஒரு ச்லோகம் சொல்ல வேண்டும் என்று தர்மசாஸ்திரத்தில் விதித்திருக்கிறது.

**கீடா : பதங்கா : மசகாச்ச வ்ருக்ஷா:**
**ஜலே ஸ்தலே யே நிவஸந்தி ஜீவா: ।**
**த்ருஷ்ட்வா ப்ரதீபம் ந ச ஜன்ம பாஜா**
**பவந்தி நித்யம் ச்வபசா ஹி விப்ரா: ।।**



புழுக்களோ, பக்ஷிகளோ அல்லது ஒரு கொசுவாகத் தான் இருக்கட்டும், அந்தக் கொசுவோ, நம்மாதிரி உயிரில்லை என்று நினைக்கப்படுகிற வ்ருக்ஷமோ, இன்னும் ஜலத்திலும், பூமியிலும் எத்தனை தினுஸான ஜீவராசிகள் இருக்கின்றனவோ அவற்றில் எதுவானாலும் அதுவோ, மநுஷ்யர்களுகக்குள்ளேயே பேதம் இல்லாமல் பிராம்மணனோ, பஞ்சமனோ எவனானாலும் ஸரி, எதுவானாலும் ஸரி இந்த தீபத்தைப் பார்த்து விட்டால் அந்த ஜீவனுடைய ஸகல பாபங்களும் நிவ்ருத்தியாகி, இன்னொரு ஜன்மா எடுக்காமல் நித்யானந்தத்தில் சேரட்டும் என்று இந்த ச்லோகத்துக்கு அர்த்தம்.

ஜலத்திலும் பூமியிலும் இருக்கிற பிராணிகள் மட்டும் தானா என்றால் இல்லை. முதலிலேயே பக்ஷிகளையும் (பதங்கா:), கொசுக்களையும் மசகா: மசகம் என்றால் கொசு, 'மஸ்கிடோ' இதிலிருந்து வந்தது தான்) சொல்லி விட்டதால் ஆகாசத்தில் பறக்கிற பிராணிகளையும் சொல்லி விட்டதாக அர்த்தம். ஆகாசத்தில் பறந்தாலும் இந்தக் கொசு ஜலத்தில்தான் முட்டை இடுகிறது. பக்ஷி கிளைகளில்தான் வந்து கூடு கட்டிக் குஞ்சு பொரிக்கிறது. மீன் ஜலத்தில் மட்டும் தான் இருக்கும். தவளை ஜலத்திலும் இருக்கும், பூமியிலும் இருக்கும். அநேக பிராணிகளால் பூமியில் மட்டும்தான் வசிக்க முடியும். இப்படியெல்லாம் பல தினுஸில் பிரித்துப் பிரித்துச் சொல்லி, அத்தனை உயிரினங்களும், பாபம் நிவ்ருத்தியாகி ஸம்ஸாரத்தைத் தாண்ட வேண்டும் என்று இந்த ச்லோகம் ப்ரார்த்திக்கிறது.

இந்தக் கார்த்திகை தீபத்தை எந்தப் பிராணி பார்த்தாலும் அதற்கு நித்ய ச்ரேயஸ் உண்டாகட்டும் என்று சொல்லியிருக்கிறது. 'த்ருஷ்ட்வா என்று ச்லோகத்தில் வருவதற்கு 'பார்த்தால்' என்று அர்த்தம். வ்ருக்ஷம் - மரம் எப்படிப் பார்க்க முடியும்? நம் மாதிரி அதற்குக் கண், பார்வையெல்லாம் உண்டா? தாவரத்துக்கும் பலவிதமான உணர்ச்சிகள் இருப்பதாக இப்போது ஸயன்ஸ்படியே சொன்னாலும் அதற்குப் பார்வை உண்டா என்று தெரியவில்லை. அதனால் எனக்கு ஒன்று தோன்றுகிறது. 'பார்த்தால்' என்று ச்லோகத்தில் சொல்லியிருந்தாலும், பார்க்காவிட்டாலும் பரவாயில்லை; மரம் மாதிரிப் பார்க்க சக்தியில்லாவிட்டாலும் பரவாயில்லை: அல்லது பார்க்கிற சக்தி வாய்ந்த பிராணிகளாக இருந்தும் கூட இந்த தீபத்தைப் பார்க்காவிட்டாலும் பாதகமில்லை; இந்த தீபத்தின் ஜ்வாலையானது அதைப் பார்க்கிறவர் பார்க்காதவர் எல்லார் மேலும் படுகிறதோ இல்லையோ? அம்மாதிரி இதன் ப்ரகாசம் படுகிற எல்லைக்குள் இருக்கிற 7ஸகல ஜீவராசிகளுக்கும் பாப நிவ்ருத்தி, ஜன்ம நிவ்ருத்தி, சாச்வதமான ச்ரேயஸ் கிடைக்க வேண்டும் - என்றிப்படி அர்த்தம் பண்ணிக் கொள்ளலாம் என்று தோன்றுகிறது.

தீபத்தின் ஒளி எப்படி வித்யாஸம் பார்க்காமல், பிராம்மணன், பஞ்சமன், புழு, பக்ஷி, கொசு, மரம் மற்ற நீர்வாழ் ப்ராணிகள், நிலம் வாழ் விலங்கினங்கள் இவற்றின் மீது படுகிறதோ அப்படியே நல் மனஸிலிருந்து அன்பு ஒரு தீபமாக, எல்லோரையும் தழுவுவதாகப் பிரகாசிக்க வேண்டும். இப்படிப்பட்ட அகவொளியோடு, புற ஒளியாக, தீபத்தை ஏற்றி வைத்து, மேலே சொன்னது போல் பிரார்த்திக்க வேண்டும்.

முன்பெல்லாம் சொக்கப்பானை என்று ஆலயத்திலிருந்து தீபத்தைக் கொண்டு வந்து பெரிதாக ஏற்றினார்களே, திருவண்ணாமலையில் இப்போதும் மலை உச்சியில் மஹா பெரிய ஜோதியாக தீபம் ஏற்றுகிறார்களே, இதன் உள்ளர்த்தம் என்ன? சின்ன அகலாக இருந்தால், அதன் ப்ரகாசம் கொஞ்ச தூரம் தான் பரவும். சொக்கப்பானை என்றால் அதன் பிரகாசம் ரொம்ப தூரத்துக்குத் தெரியும். அண்ணாமலை தீபம் மாதிரி மலையில் ஏற்றி வைத்து விட்டாலோ, அது எத்தனையோ ஊர்கள் தாண்டிக் கூடத் தெரியும். அத்தனை பெரிய எல்லைக்குள் இருக்கிற ஸகல ஜீவபந்துக்களின் மீதும் இந்தப் பிரகாசம் பட்டு அவற்றின் பாபங்கள் போக வேண்டும் என்ற உத்தமமான சிந்தனையில்தான் சொக்கப்பானை, அண்ணாமலை தீபம் என்றெல்லாம் நம் பூர்விகர்கள் ஏற்பாடு பண்ணியிருக்கிறார்கள்.

ஸாதாரணமாக இரண்டு கால் ப்ராணி, நாற்கால் ப்ராணிகள் தான் அதிகம். வண்டுக்கு ஆறு கால்; சிலந்திக்கு எட்டுக் கால்கள்! மரவட்டை, கம்பளிப் பூச்சி என்று எடுத்துக் கொண்டால் அதற்கு எண்ண முடியாத கால்கள். வேதத்தில் அடிக்கடி "த்விபாத்", "சதுஷ்பாத்" என்று இரு கால், நாற்கால் ப்ராணிகளின் க்ஷேமத்தைக் கோருகிற மாதிரியே எத்தனை காலுள்ள ப்ராணிகளானாலும் அவற்றுக்கும், இன்னும் பாம்பு மாதிரி, மீன் மாதிரி காலே இல்லாத ப்ராணிகளுக்கும் க்ஷேமம் உண்டாகட்டும் என்று மந்திரங்கள் இருக்கின்றன.

பரம ஞானிக்கும் பிராம்மணன் பஞ்சமன் (ப்ராம்மணே... ச்வபாகே) என்ற வித்யாஸம் தெரியாது என்று கீதையில் சொல்லியிருக்கிறது. நமக்கும் கூட, காரியத்தில் பேதத்தைப் பார்த்தாலும் மனஸில் சுரக்கும் அன்பில் வித்தியாஸமே கூடாது என்கிற மாதிரிதான் ரந்திதேவன் முதலிய பிராம்மணனுக்கும் கடைசியில் பஞ்சமனுக்கும் தானம் பண்ணிருக்கிறான். இந்தக் கார்த்திகை தீப ச்லோகத்தில் "ச்வபசா" விப்ரா என்று பஞ்சமன், பிராம்மணன் இருவரையும் சொல்லியிருக்கிறது. க்ஷேமத்தைக் கோரும் போது ஜாதி வித்தியாஸமே இல்லை. நல்லவன், கெட்டவன் என்றும் வித்தியாஸம் பார்க்கக் கூடாது. மஹாபாபத்தைச் செய்து விட்டு நரகவாசிகளாயிருப்பவர்களிடமும் அன்பு பாராட்டி, அவர்களுக்கும் உபகாரம் செய்யச் சொல்வது நம் சாஸ்த்ரம். அதைப் பற்றிக் கொஞ்சம் சொல்கிறேன்.

## நரகவாஸிக்கும் நலன்

நரகத்தில் இருப்பவர்களுக்குக் கூட, நம் சாஸ்திரப்படி பரோபகாரம் நடக்கிறது.

திவஸமும், தர்ப்பணமும் செய்கிற போது பூலோகத்திலோ வேறு எங்கோ, எந்த ரூபத்திலோ பிறந்திருக்கிற நம் மூதாதையர்களுக்கு அது க்ஷேமத்தைக் கொடுக்கிறது. இங்கே நாம் கொடுக்கிற எள், தண்ணீர், பிண்டம் முதலானவைகளைப் பித்ரு தேவதைகள், நம் மூதாதைகள் எந்த ரூபத்தில் எங்கே பிறந்திருந்தாலும், அதற்கேற்ற ஆகாரமாக மாற்றி அங்கே கிடைக்கச் செய்து விடுவார்கள். நம் நாட்டு ரூபாய் வெளிதேசக் கரன்ஸியாக்க எக்ஸ்சேஞ்ச் பாங்க் இருக்கிற மாதிரி பித்ரு தேவதைகள் இப்படி ஆகாரத்தை மாற்றி கொடுக்கிறார்கள்.

இந்த தேசாசாரம் ஜனங்களின் ரத்தத்தில் அடியோடு வற்றிப் போய்விடாததால் இன்னமும் அநேகமாக எல்லாரும் ரொம்பச் சுருக்கமாகவாவது பித்ரு கார்யங்கள் திவஸம், தர்ப்பணம் முதலியவற்றைச் செய்து வருகிறார்கள். ஆனால் சிரத்தைதான் போய்விட்டது. பித்ரு காரியங்களுக்கு "ச்ராத்தம்" என்று பேர், இருப்பதே அதற்கு ச்ரத்தை முக்யம் என்பதால் தான். ச்ரத்தை இருந்தால் இப்படிச் சுருக்கமாகவும், குறுக்கியும், ச்ராத்த காலந் தப்பியும் பண்ணுவது போலில்லாமல், யதோக்தமாக, புஷ்களமாக நடக்கும். பலனும் ப்ரத்யக்ஷமாகத் தெரியும். என்ன பலன் என்றால் சொல்கிறேன். இப்போது பெரும்பாலோர் ஏதோ ஒப்புக்குத் தான் பித்ரு காரியங்கள் பண்ணுகிறார்கள். பாக்கியிருப்பவர்களோ மேலும் துணிந்து 'ஸூப்பர்ஸ்டிஷன்' என்றே இவற்றை அடியோடு நிறுத்தியிருக்கிறார்கள். இதன் விபரீத பலன் எனக்குத் தான் தெரியும். அநேக வீடுகளில் சித்தப் பிரமம், அபஸ்மாரம் (காக்காய் வலிப்பு), இன்னும் போன தலைமுறைகளில் கேள்வியே படாத அநேக ரத்த வியாதிகள், nervous diseases களுடன் அநேகர் அவஸ்தைப்பட்டுக் கொண்டு ஜோஸ்யர், ஆரூடக்காரர், மாந்த்ரிகர் எல்லாரிடமும் போய்விட்டு என்னிடம் வருகிறார்களே. இந்த கஷ்டங்களுக்குப் பெரும்பாலும் காரணம் பித்ரு கார்யங்களை விட்டுவிட்டது தான். 'மாதா பிதாக்கள் (உயிருடன் இருக்கும் போது) செய்வது மக்களைக் காக்கும்' என்றால், இன்னொரு பக்கம், 'மாதா பிதாக்கள் உயிர் போன பின் அவர்களுக்காக மக்கள் செய்யாதது மக்களைத் தாக்கும்' என்றும் புரிந்து கொள்ள வேண்டும். அப்பாவும், அம்மாவும் மற்ற வம்ச முதல்வர்களும் எங்கேயாவது கோபித்துக் கொண்டு சபிப்பார்களா என்று கேட்கக் கூடாது. பித்ருக்கள் சபிக்காமலிருக்கலாம். ஆனால் பித்ரு தேவதைகள் இருக்கிறார்களே அவர்கள் இந்தப் பின் தலைமுறையினர் தங்கள்

மூலமாக முன்னோர்களுக்கு எள்ளோ, தண்ணியோ, அன்னமோ அளிக்கவில்லையே என்பதைப் பார்த்துச் சபித்து விடுவார்கள். ஆனபடியால் நாமும் நம் பின் ஸந்ததியும் நன்றாயிருக்கவே முன் தலைமுறையினருக்கு திவஸ தர்ப்பணாதிகள் பண்ணத்தான் வேண்டும். அதாவது இங்கே பரோபகாரத்தோடு ஸ்வய உபகாரமும் சேருகிறது.

இறந்துப் போனவுடனேயே எல்லோரும் மறுபடியும் இந்த பூலோகத்திலேயே பிறந்து விடுவதில்லை. நன்றாக வேலை செய்தால் இன்க்ரிமென்ட் மட்டுமல்லாமல் போனஸும் தருகிறார்கள் அல்லவா? ரொம்ப நன்றாகச் செய்தாலோ ப்ரோமஷனே கொடுத்து மேலே தூக்கி விடுகிறார்கள். வேலையில் தப்பு பண்ணினால் இன்கிரிமென்டை நிறுத்தி விடுகிறார்கள். பெனல்டி (அபராதம்) விதிக்கிறார்கள்; ரொம்ப மோசமாகப் பண்ணினால் கீழ் வேலைக்கே தள்ளி விடுகிறார்கள். இதே போல், புண்யம் பண்ணினவர்களுக்கு இன்க்ரிமென்ட் மாதிரி இந்த பூலோகத்திலே ஸௌக்கியமான இன்னொரு ஜன்மா கிடைப்பதற்கு முன்னாடி ஒரு போனஸ் கிடைக்கிறது. ஸ்வர்க வாஸம் தான் இந்த போனஸ். ரொம்பப் புண்யம் பண்ணியிருந்தால் ஸ்வர்க்க லோகத்துக்கே நிரந்தரமான ப்ரமோஷன். இப்படியே பாபம் பண்ணினவர்கள் முதலில் பெனல்டியாக நரகலோகத்தில் வஸிக்க வேண்டும். அப்புறம் இன்க்ரிமெண்ட் இல்லாத மாதிரி பூலோகத்தில் கஷ்டத்திலே பிறக்க வேண்டும். ரொம்பப் பாபம் பண்ணினால் கீழ் வேலைக்கே போக வேண்டியது - நிரந்தர நரக வாஸம்.

தர்ப்பணம், திவஸம், இவற்றின் பலன் நரகலோகம் தவிர மற்ற லோகங்களில் உள்ளவர்களையே சேரும். ஸ்வர்க்கத்திலேயே பல தினுஸுகள்; பல லோகங்கள் தேவ லோகம்; கந்தர்வ லோகம்; வித்யாதர லோகம் என்று. இப்படி நரகத்திலும் - தாமிஸ்ரம், அந்ததாமிஸ்ரம், புத்ரௌரவம் என்று பல உண்டு. நாம் இறைக்கிற எள்ளும் தண்ணீரும், கொடுக்கிற பிண்டமும் இப்படிப்பட்ட லோகங்களிலுள்ள நரகவாஸிகளுக்குப் போய்ச் சேராது.

ஒரு தேசத்துக்கும் இன்னொரு தேசத்துக்கும் சண்டை ஏற்பட்டு விட்டால், அப்போது பணம் எக்ஸ்சேஞ்ச் பண்ணி எதிரி தேசத்துக்கு அனுப்பவே முடிவதில்லையல்லவா? இப்படி நரகவாஸிகளுக்காகப் பித்ரு தேவதைகள் ஆஹார எக்ஸ்சேஞ்ச் பண்ணுவதில்லை.

இப்படிப்பட்ட நரகவாஸிகளான மஹா பாபிகளிடமும் நம்முடைய ரிஷிகளுக்கு மனஸ் உருகி, அவர்களுக்கும் க்ஷேமம் உண்டாக்குவதற்காக மந்த்ர பூர்வமாக சில வஸ்துக்களைக் கொடுக்கச் சொல்லி ஏற்பாடு பண்ணியிருக்கிறார்கள். சுத்தமான வஸ்துக்களைக் அவர்களுக்கு நாம் சேர்க்க முடியாது. ஆனால் சில அசுத்த வஸ்துக்களே அவர்களுடைய மஹா கஷ்ட நிலையில் ஆஹாரமாக அவர்களுக்கு கிடைக்கலாம் என்று பகவான் வைத்திருக்கிறான். நாம் வேஷ்டியை பிழிகிற அழுக்கு ஜலம், குளிக்கிற போது நம் சிகை வழியாக வருகிற ஜலம் இவை எல்லாம் நரகத்திலுள்ளவர்களுக்கு ஆஹாரமாக மாறி, அவர்களுடைய மஹா கஷ்டத்தில் கொஞ்சம் கொஞ்சம் ஸுகம் தருகின்றன. அவர்களை உத்தேசித்து நாம் அன்பான பாவனையோடு துணியைப் பிழிந்தால், குடுமி ஜலத்தைப் பிழிந்தால், இந்தப் பலன் அவர்களுக்குக் கிடைக்கும். மந்தரமும் சொல்லி இந்தக் காரியங்களைச் செய்ய அதிகாரம் பெற்றவர்கள் அப்படியே செய்ய வேண்டும். சாப்பிட்டு முடிந்தபின் எச்சில் கை ஜலத்தை இலைக்கு வலது பக்கத்தில் மந்த்ரம் சொல்லி விட்டால் அது நரகங்களிலேயே ரொம்பக் கொடூரமான ரௌரவத்தில் எத்தனையோ கோடி வருஷங்களாக இருப்பவர்களின் தாஹத்தை தீர்க்க உதவுகிறது. ஆந்திரர்கள் உத்ராபோசனத்துக்குப் பின் இதைத் தவறாமல் பண்ணுகிறார்கள். இப்படி எச்சிலையும், அழுக்கு ஜலத்தையும் ஒருவருக்குத் தருவதா என்று நினைக்க வேண்டாம். நரக வாஸத்திலே அவர்கள் இருக்கிற ஸ்த்தியில் இதுவே தான் அவர்களுக்குப் பிடித்தமானதாக இருக்கும். நம் லோகத்திலேயே வராஹத்தைப் பார்க்கவில்லையா?

நாம் பண்ணும் பாபத்தையெல்லாம் எத்தனையோ கருணையோடு மன்னிக்கும் பகவான் இப்படி ஒருத்தரை ரௌரவத்தில் போட்டு வதைக்கிறான் என்றால் அவர்கள் செய்திருக்கிற பாபம் ரொம்பவும் பயங்கரமாயிருந்திக்க வேண்டும். அப்படிப்பட்ட வர்களுக்கும் கூட தாஹம் தீரட்டும். தாகம் தணியட்டும் என்று நினைத்து அதற்கான வழியைச் சொல்கிறது நம் தர்ம சாஸ்த்ரம்.

பௌத்த மதம், கிறிஸ்துவ மதம் மாதிரி நம் மதத்தில் ஜீவகாருண்யத்துக்கு முக்கியத்துவம் தரவில்லை என்று தப்பாக நினைக்கிறவர்கள் இதையெல்லாம் கவனிக்க வேண்டும்.

# முகாம் நிகழ்ச்சிகள்

சென்ற இதழ் தொடர்ச்சி

ஆந்திர மாநிலம் சாமல்கோட் அருகில் உள்ள பெத்தாபுரம் என்னும் இடத்தில் ஸ்ரீஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகள் முகாம் 16.09.22 முதல் 11.10.22 வரை இருந்தது. 26.09.22 முதல் 05.10.22 வரை சாரதா நவராத்திரி பூஜை நடைபெற்றது.

யாகசாலை பூஜை, கோ பூஜை, கன்யா பூஜை, சுவாஸினி பூஜை, வடு பூஜை, ரிக்சம்ஹிதா ஹோமம், ஸ்ரீ வித்யா ஹோமம், சண்டி பாராயணம் மற்றும் ஹோமம் இவைகளுக்கு பிரம்மாண்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. மேலும் தேவி மஹாத்மியம் மற்றும் லலிதோபாக்யான பாராயணங்களும் நடைபெற்றன. சாராதா நவராத்திரியை முன்னிட்டு சங்கீத கச்சேரிகளும் நடைபெற்றன. இவை அனைத்திலும் உள்ளூர் பக்தர்கள் திரளாக கலந்து கொண்டதுடன் அவர்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது.

**05.10. 22 -** விஜயதசமியன்று காலஞ்சென்ற சிற்பி ஸ்ரீ கணபதி ஸ்தபதி அவர்களின் குமாரர் ஸ்ரீ சங்கர ஸ்தபதி அவர்களின் திருக்கோவில்கள் நிர்மாணம் மற்றும் புனருத்தாரணம் ஆகிய சேவைகளை பாராட்டி ஸ்வர்ண காப்பு ஸ்ரீ பெரியாவாள் அவர்களால் வழங்கப்பட்டது. இவர் தாமாக முன்வந்து சமீபத்தில் உதயம்பாக்கம் கிராமத்தில் நடைபெற்ற திருக்கோவில் புனரமைப்புக்காக கற்கள் வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. நித்ய பூஜை முடிந்த பிறகு வேத கோஷம் முழங்க வேதாரம்ப நிகழ்ச்சி நடைபெற்றது. இதனை தொடர்ந்து ஆச்சார்ய ஸ்வாமிகளுக்கு கலசாபிஷேகம் செய்விக்கப்பட்டது. பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.



ஹைதராபாத்தைச் சேர்ந்த ஸ்ரீ V.S.R. மூர்த்தி என்பவரால் தெலுங்கு மொழியில் எழுதப் பெற்ற ''விஜய யாத்ரா'' என்ற

புத்தகம் ஸ்ரீஸ்ரீ பெரியவாள் தங்கியுள்ள ஸ்ரீ மாதவராவ் குடியிருப்பு மண்டபத்தில் ஸ்ரீ பெரியவாள் முன்னிலையில் 12.10.22 அன்று வெளியிடப்பட்டது. இது ஜகத்குரு ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகளின் சரிதமாகும். இப்புத்தகத்தில் கூடுதலாக 120 பக்கங்களில் ஜகத்குருவின் யாத்திரை புகைப்படங்களும் அனுக்ரஹ பாஷணங்களும் இணைக்கப்பட்டுள்ளன. விரைவில் இப்புத்தகம் ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்படவுள்ளது.

**19.10.22** அன்று பூஜ்யஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் மண்டபேடா என்னுமிடத்திலிருந்து புறப்பட்டு மாலை ராஜமுந்திரி வந்து சேர்ந்தார்கள். வழியில் ஓலப்பள்ளி எனும் கிராமத்தில் உள்ள காஞ்சி காமகோடி ஸ்மார்த்த வேத பாடசாலைக்கும் விஜயம் செய்தார்கள்.

ராஜமுந்திரியில் ஸ்ரீஸ்ரீ பெரியவர் அவர்கள் ஊர்வலமாக ஸ்ரீ வெங்கடேஸ்வர சுவாமி கோவிலுக்கு அழைத்து வரப்பெற்றார்கள்.

அடுத்தநாள் ஸ்ரீ தத்தாத்ரேய வேத வித்யா குருகுலத்தில் பூர்ணாஹுதி நிகழ்ச்சியை அனுக்ரஹித்தார்கள்.

**27.10.22** வரை ராஜமுந்திரியில் முகாம் நடைபெற்றது. 27.10.22 மாலை ராஜமுந்திரியிலிருந்து முகாம் புறப்பட்டு இரவு 7.45 மணியளவில் முக்கமாலா வந்து சேர்ந்தது.

28.10.22 முதல் 3.11.22 வரை முக்கமாலா என்ற கிராமத்தில் நடைபெறவுள்ள ப்ரம்ம சப்தாஹ நிகழ்ச்சிக்காக முகாம் முக்கமாலா வந்து சேர்ந்தது. முகாம் வெள்ளிக்கிழமை பூஜை, பிரதோஷ பூஜை, கார்த்திகை சோமவார பூஜை, பிருந்தாவன துவாதசி, பௌர்ணமி பூஜைக்காக 10.11.22 வரை முக்கமாலாவில் தொடரவுள்ளது.

**25.10.22** அன்று சூரிய க்ரஹண மோட்ச ஸ்நானம் கோதாவரி புஷ்கர கட்டத்தில் நடைபெற்றது.

**26.10.22 -** செங்கல்பட்டு அருகில் உள்ள உதயம்பாக்கம் கிராமத்தில் கடந்த மாதம் நடைபெற்ற ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் சமேத ஸ்ரீ சந்திரமௌலீஸ்வரர் திருக்கோயில் கும்பாபிஷேகத்தை தொடர்ந்து மண்டலாபிஷேக பூர்த்தி நடைபெற்றது.

**27.10.22** - முதல் முக்கமாலா கிராமத்தில் ப்ரம்ம சப்தாஹம் துவங்கி ஏழு நாட்கள் நடைபெற உள்ளது.

# கார்த்திகை மாதம்
# ஸ்ரீ மடத்தில் - விசேஷ தினங்கள்

| தேதி | கிழமை | விபரம் |
|---|---|---|
| 20-11-2022 | ஞாயிறு | ஏகாதசி |
| 21-11-2022 | திங்கள் | த்வாதசி, ப்ரதோஷ பூஜை |
| 22-11-2022 | செவ்வாய் | ஸ்வாதி வேத பாராயணம் |
| 24-11-2022 | வியாழன் | அனுஷம் வேத பாராயணம் ; அனுஷம் தேர் |
| 25-11-2022 | வெள்ளி | மூலம் தேர் |
| 26-11-2022 | சனி | மூலம் வேத பாராயணம் |
| 27-11-2022 | ஞாயிறு | உத்ராடம் தேர் |
| 28-11-2022 | திங்கள் | உத்ராடம் வேத பாராயணம் |
| 29-11-2022 | செவ்வாய் | அவிட்டம் தேர் ; அவிட்டம் வேத பாராயணம் |
| 03-12-2022 | சனி | ஏகாதசி |
| 04-12-2022 | ஞாயிறு | த்வாதசி |
| 05-12-2022 | திங்கள் | ப்ரதோஷ பூஜை, பரணி தீபம் |
| 06-12-2022 | செவ்வாய் | திருவண்ணாமலை தீபம் |
| 07-12-2022 | புதன் | ஸர்வாலயதீபம், பௌணர்மி பூஜை |
| 18-11-2022; 25-11-2022; 02-12-2022; 09-12-2022 வெள்ளிக்கிழமை பூஜை | | |

# ஸ்ரீமத் தேவி பாகவதம் - 26

பி. ஆர். கண்ணன்

***மணித்வீப வர்ணனை***

***19. சிந்தாமணி பவனம் :*** *சூர்ய, சந்த்ர, மின்னல் போன்ற ப்ரகாசமுள்ள கற்களினாலான பவனம். ஒளியின் மிகுதியினால் கண் தெரிவதில்லை. முக்கோண மத்தியில் அம்பாளின் பவனம்.*



*20 - 23. சுற்றிலும் நான்கு மண்டபங்கள். அவை ச்ருங்கார மண்டபம், முக்தி மண்டபம், ஞான மண்டபம், ஏகாந்த மண்டபம். இவை கோடி சூர்ய ஒளி பூண்ட மண்டபங்கள். நான்கு பக்கங்களிலும் நந்தவனங்கள். மஹாபத்மாடவீ; சுகந்தம் நிறைந்த மணித்வீபம்.*

***ஸ்ருங்காரமண்டபே தேவ்யோ காயந்தி விவிதை: ஸ்வரை: ।***
***ஸபாஸதோ தேவவரா மத்யே ஸ்ரீஜகதம்பிகா ॥***

***முக்திமண்டப மத்யே து மோசயத்யநிஸம் ஸிவா ந***
***ஜ்ஞாநோபதேஸம் குருதே த்ருதீயே ந்ருப மண்டபே ॥***

***சதுர்த்தமண்டபே சைவ ஜகத்ரக்ஷாவிசிந்தநம் ந மந்த்ரிணீஸஹிதா நித்யம் கரோதி ஜகதம்பிகா ॥***

*ச்ருங்கார மண்டபத்தில் ஜகதம்பிகைக்கு அலங்காரம், சங்கீதம், ந்ருத்யம் முதலிய உபசாரங்களை தேவிகள் செய்கின்றனர். முக்திமண்டபத்தில் அம்பிகை தகுதியுள்ள*

ஸாதகர்களுக்கு முக்தியளிக்கிறாள். ஞான மண்டபத்தில் அம்பாள் தகுந்த சிஷ்யர்களுக்கு ஞானோபதேசம் செய்கின்றாள். ஏகாந்தமண்டபத்தில் அம்பிகை மந்த்ரிணிகளுடன் அமர்ந்து ஜகத்திலுள்ள ஜீவர்களின் நிலைகள், அவர்கள் கடைத்தேறும் வழிமுறைகள் பற்றி ஆலோசித்து முடிவெடுக்கிறாள்.

**24. பகவதியின் மஞ்சம்.** நடுவில் உள்ள மஞ்சத்தில் பகவதி அமர்ந்திருக்கிறாள். அதற்கு பத்து படிகள், சக்தி தத்வங்கள்.

**ப்ரஹ்மா விஷ்ணுஸ்ச ருத்ரஸ்ச ஈஸ்வரஸ்ச ஸதாஸிவ: । ஏதே பஞ்சகுரா: ப்ரோக்தா: பலகஸ்து ஸதாஸிவ: ।।**

**ஸ்ருஷ்ட்யாதௌ து ஸ ஏவாயம் ததர்தாங்கோ மஹேஸ்வர: ।** கட்டில் கால்களாக ப்ரம்மா, விஷ்ணு, ருத்ரர், ஈஸ்வரர் ஆகிய நால்வரும் உள்ளனர். மேலே உள்ள பலகையாக ஸதாஸிவம் இருக்கிறார். மேலே பரமேஸ்வரனின் இடது பக்கத்தில் பகவதி ப்ரகாசிக்கிறாள். பகவதியின் இரண்டு ரூபங்களான சிவனும் சக்தியும் சேர்ந்து காட்சியளிக்கின்றனர். ஸ்ரீபரமேஸ்வரன் மன்மதனின் அழகைப் பொய்யாக்கிக்கொண்டு, கோடி மன்மதர்களின் அழகுடன் ப்ரகாசிக்கிறார். பஞ்சமுகி, மூன்று கண்கள், 16 வயது, மான், பரசு (கோடாலி), அபய, வரத முத்ரைகள்; சுத்தஸ்படிக காந்தி, கோடிசூர்யப்ரகாசம், கோடிசந்த்ர குளிர்ச்சி இவ்வாறாக தர்சனம் தருகிறார்.

ஸ்ரீபுவனேஸ்வரி சிவனின் இடதுபாகத்தில் காட்சியளிக்கிறார். சூர்ய, சந்த்ரர், போல் ப்ரகாசிக்கும் சூடாமணி, குங்கும கஸ்தூரி திலகம், அர்த்தசந்த்ரனைத் தோற்கடிக்கும் நெற்றி, ஸ்ரீசக்ர தாடங்கங்கள், உதயகால சுக்ரன்போன்ற மூக்குத்தி, முத்துமாலை, கேசபாரம் மல்லிகை வாசனையுடன் மதம் பிடித்த தேனீக்களின் வரிசைபோன்று; மாதுளம் விதை போன்ற அழகிய பல்வரிசை; சங்குக்கழுத்து; களங்கமில்லாத சந்த்ரன் போன்ற முகமண்டலம்; தாமரை இதழ்க் கண்கள்; விரல்களில் மாணிக்க மோதிரங்கள்; கங்கணம், தோள்வளை; ரத்னநூபுரம்; நகங்களின் ப்ரகாசம்; அதிப்ரகாசஸ்வரூபம். **ஸர்வஸ்ருங்காரவேஷாட்யா ஸுகுமாராங்கவல்லரீ । ஸௌந்தர்யாதாரா ஸர்வஸ்வா நிர்வ்யாஜகருணாமயீ ।।** எல்லா வகையான அலங்காரங்களையும் அணிந்து, இளங்கொடிபோன்று ப்ரகாசிக்கும் அன்னை, உலகின் எல்லா அழகிற்கும் ஆதாரமாகத் திகழ்ந்து, எல்லாமாகவும் தானே நின்று, எந்தவித காரணமுமின்றி அதீத கருணை காட்டுபவளாக விளங்குகிறாள். வீணையின் இனிமையைத் தோற்கடிக்கும்

குரல்வளம், இச்சா, ஞான, க்ரியா சக்தி ஸ்வரூபிணீ. சுற்றிலும் மூர்த்தீகரித்து நிற்கும் தேவதைகள் லஜ்ஜா, புஷ்டி, துஷ்டி, கீர்த்தி, காந்தி, க்ஷமா, தயா, புத்தி, மேதா, ஸ்ம்ருதி, லக்ஷ்மி ஆகியோர். பீடசக்திகள் ஒன்பதுபேர் சேவையில் உள்ளனர் - ஜயா, விஜயா, அஜிதா, அபராஜிதா, நித்யா, விலாஸினி, தோக்த்ரி, அகோரா, மங்களா. சங்க, பத்மநிதிகள் ஆங்கு சேவையிலுள்ளன. அவைகளிலிருந்து நதிகள் - **நவரத்நவஹா, காஞ்சநஸ்ரவா, ஸப்ததாதுவஹா** - அதாவது நவரத்னங்கள், பொன், ஸப்ததாதுக்கள் இவைகளைத் தாங்கி ப்ர்வஹிக்கின்றன.

மணித்வீபம் ஸ்ருஷ்டியின் போது பெருகியும், ப்ரளயத்தின் போது குறுகியும் உள்ளது; நாசம் என்பதற்கே இடமில்லை. **ந ஸூர்யசந்த்ரௌ நோ வித்யுத்கோட் யோக்நிஸ்ததைவ ச । ஏதஸ்ஸ பாஸா கோட்யம்ஸகோட்யம்ஸேநாபி தே ஸமா:।।** மணித்வீபத்தின் ஒளி எத்தகையது என்றால், அதன் பலகோடிகளில் ஒரு பங்குக்குக்கூட, கோடிக்கணக்கான சூர்யர், சந்த்ரர், மின்னல்கள், அக்னிகள் சேர்ந்தும் சமானமாகா. ஆனந்தத்தைக் கருதினால், ஒரு சாதாரண ராஜாவின் ஆனந்தத்திலிருந்து, ப்ரம்ம லோகம் வரையிலுள்ள ஆனந்தம் அங்கே கிடைக்கின்றது. ஸகல ஐஸ்வர்யம், தேஜஸ், பராக்ரமம், உத்தமகுணங்கள், தயை இவற்றின் எல்லை அது. மணித்வீப ஸ்மரணையினாலேயே ஸகல பாப நாசம் ஏற்படும். ம்ருத்யுகாலத்தில் ஸ்மரித்தால் மணித்வீபத்தை அடையலாம்.

மேற்கண்ட ஐந்து அத்தியாயங்களை, அதாவது, கேனோபநிஷத் கதை, கௌதமர் சாபம், மணித்வீப வர்ணனை (3 அத்யாயங்கள்), ஆகியவற்றை பாராயணம் செய்வதால் பூத, ப்ரேத, பிசாச ச்ரமங்கள் நீங்கும். **நவீநக்ருஹநிர்மாணே வாஸ்துயோகே ததைவ ச ந படிதவ்யம் ப்ரயத்நேந கல்யாணம் தேந ஜாயதே ।।** புது க்ருஹ ப்ரவேசத்தின் போது பாராயணம் செய்வது ஸகல மங்களங்களையும் அளிக்கும்.

(வளரும்)

# சாணக்ய ஸுபாஷிதம்

### உற்றார் உறவினர்

**ஸத்யம் மாதா பிதா ஞானம் தர்மோ ப்ராதா தயா ஸகா**

**சாந்தி: பத்னீ க்ஷமா புத்ர: ஷடேதே மம பாந்தவா: ॥**

*ஸத்யம் - அம்மா, ஞானம் - தந்தை, தர்மம் - உடன் பிறந்தோன், இதையை - நண்பன், சாந்தி - மனைவி, பொறுமை - புத்ரன் இந்த ஆறும் என் உறவினர்.*

### அடைய முடியாதது

**யத்தூரம் யத்துராராத்யம் யச்ச தூரே வ்யவஸ்திதம்**

**தத் ஸர்வம் தபஸா ஸாத்யம் தபோ ஹி துரதிக்ரமம் ச ॥**

*தூரத்தில் இருப்பதை அடையவே முடியாது. உண்மை. ஆனால் அது தவத்தால் ஸாத்யம் தவம் துரதிக்ரமம்.*

### பரிசு

**போஜ்யம் போஜன சக்திச்ச ரதிசக்திச்ச வராங்கனா**

**விபவோ தானசக்திச்ச நால்பஸ்ய தபஸ: பலம்ச ॥**

*சுவைமிகு உண்டி, அதை ஜரிக்கும் சக்தி, நவ மங்கை, அவளுடன் கூடும் இன்பம் அபரிமிதமான தனம், அதை ஈயும் மனம் இவை சாதாரண தவத்தால் வரா.*

### முன் வினை

**பஹுஜன்மஸு சாப்யஸ்தம் தானம்த்ய்யனம் தப;**

**தேனைவாப்யாஸ யோகேன தேஹீ சாப்யஸ்யதே புன:ச ॥**

*முன் பிறப்பில் செய்த தானம், தவம், படிப்பு, அப்யாஸத்தால் இப்பிறவியில் மீண்டும் வாய்க்கும்.*

### இழப்பு

**யோ த்ருவாணி பரித்யஜ்ய அத்ருவம் பரிசேவதே**

**த்ருவாணி தஸ்ய நஸ்யந்தி சாத்ருவம் நஷ்டமேவ ஹி ச ॥**

*நிலையானதை விட்டு நிலையாப் பொருளின் பின் போகிறவனுக்கு நிலையானதும் நஷ்டம் நிலையாப் பொருளும் நஷ்டம்.*

## தர்மவழி

**நாஹாரம் சிந்தயேத் ப்ராக்யோ தர்மமேகம் ஹி சிந்தயேத்**

**ஆஹாரோ ஹி மனுஷ்யாணாம் ஜன்மனா ஸஹ ஜாயதே ச ॥**

*மேதாவி ஆஹாரம் பற்றி கவலை கொள்ளக் கூடாது. அவன் சிந்தனை அறத்திலேயே இருக்க வேண்டும். ஒருவன் பிறக்கும் போதே அவனுக்குத் தேவையான ஆஹாரம் உண்டாகி விடுகிறதல்லவா !*

## நிலையானது

**சலா லக்ஷ்மீ சலா: ப்ராணாச்சலே ஜீவிதமதிரே**

**சலா அசலே ச ஸம்ஸாரே தர்ம ஏகோ ஹி நிச்சல: ॥**

*செல்வம், ப்ராணன், வாழ்க்கை, வீடு இவை அனைத்தும் சலம். (நிலையற்றவை) ஸலமாயிருக்கும் இந்த ஸம்ஸாரத்தில் தர்மம் ஒன்றுதான் நிச்சலம்.*

## நல்லவை

**தாரித்ரிய நாஸனம் தானம் சீலம் துர்கதி நாசனம்**

**அக்யான நாசினீ ப்ரக்யா பாவனா பய நாசினீ ॥**

*தனம் வறுமையைப் போக்கும், நன் நடத்தை துர்கதியைப் போக்கும், அறிவு அக்ஞானத்தைப் போக்கும், நம்பிக்கை பயத்தைப் போக்கும்.*

இனி கவலை வேண்டாம். 50, 70, வருடங்களுக்கு முன் உள்ள பழைய
(Reprint or Letterpress Books)
**ஸம்ஸ்க்ருத, தமிழ், க்ரந்தம், கந்நடம், தெலுங்கு,** etc.
ஆகிய எல்லா மொழிகளிலுள்ள புத்தகங்களை
புதிய Fontல் அச்சிட்டுதரப்படும்.
(Without Re-typeing, no proof reading)
விவரங்களுக்கு : **V.K.N. Enterprises, Mylapore,**
**Chennai-600004, Cell : 9840217036, vknprinter@gmail.com**
We reprint old books without retyping ! Books of 50,70 etc. years can be reprinted with new fonts in all languages.
Sanskrit, Tamil, Grantham, Telugu, English, Kannada, Malayalam, Hindi etc.
Contact above address.

# சங்கர கீதை

ப்ரதீபப் பேழை

ர. வேங்கடரத்தினம்

विहाय कामन् य: सर्वान् पुमांश्ररति नि: स्पृह: ।
निर्ममो निरहंकार: स शन्तिमधिगच्छति ।।

**விஹாய காமாந் ய: ஸர்வாந் புமாந்ஸ் சரதி நி: ஸ்ப்ருஹ: ।**
**நிர்மமோ நிரஹங்கார: ஸ ஸாந்திமதிகச்சதி ।।**

எவன் எல்லா விருப்பங்களையும் விடுத்து ஆசையற்றவனாகி, நான் எனது என்னும் எண்ணங்கள் இல்லாதவனாக இருக்கிறானோ அவன் சாந்தி பெறுகிறான். மம என்றால் என்னுடையது, அஹம் என்றால் நான். இந்த இரண்டு எண்ணப்பாடுகள் முறையே மமகாரம், அஹம்காரம் எனப்படுகின்றன. புறப்பற்று, அகப்பற்று என்னும் அழகிய தமிழ்ச் சொற்கள் இவற்றைக் குறிப்பிடும். இந்தப் பற்று இரண்டும் இல்லாமல், ஆசை நீங்கப் பெற்றவனாக இருப்பவன் மன அமைதியில் ஆழ்ந்து இன்பம் நுகர்கிறான். விராக: என்பது நிஸ்ப்ருஹ: என்ற நிலையேதான் பற்றற்ற நிலை ஆனந்த வாழ்வுக்குத் திறவுகோல் போல.

**இன்பம் என்பது தான் என்ன?**

ஆசைகளைக் களைந்தால் ஆனந்தம் விளையும் என்றெல்லாம் கூறியது முற்றும் சரி. முதலில், இந்த ஆனந்தம் என்பதற்கே ஒரு விளக்கம் வேண்டுமே. மெய்யான இன்பம் எது? வரையறை ஒன்று வேண்டும். இன்பது என்பது எது. வரையறை ஒன்று வேண்டும். இன்பம் என்பது எது?

பரப்பிரம்மத்தோடு மனம் இணைந்து நிற்குமேயானால் மேலான இன்பநிலையை அநுபவிக்கலாம். இதுவே பிரம்மானந்தம் என வழங்குகிறது. பரம்பொருளினிடத்தில் உள்ளம் மட்டும் பொருந்தி நின்றால் போதும். வேறு நிர்பந்தங்கள், சூழ்நிலைகள் அந்த இன்பத்தை மாற்றிவிடா; மட்டுப்படுத்திவிட மாட்டா. யோக நிலையில் நிற்பவன் ஆயினும் இது பொருந்தும். போக நிலையில் இருப்பவனும் பரம்பொருளினிடம் மனத்தைப் பறிகொடுத்து விட்டால் பரமானந்தம் எய்துவான். கூட்டத்தில் கூடிக் காலம் கழிப்பவன் ஆயினும் சரி, ஏகாந்தம் நாடிச் செல்பவன் ஆயினும் சரி, மனம் மட்டும் இறைவனிடம் லயித்து நிற்றல் போதும் என்று அழுத்தந் திருத்தமாக ஆசார்யர் அருள்கிறார்.

योगरतो वा भोगरतो वा सङ्गविहीनः ।।

यस्य ब्रह्मणि रमते चित्तं नन्दति नन्दति नन्दत्येव ।।

**யோகரதோ வா போகரதோ வா ஸங்கரதோ வா ஸங்கவிஹீ ந: ।**

**யஸ்ய ப்ரஹ்மணி ரமதே சித்தம் நந்ததி நந்ததி நத்தத்யேவ ।।**

இங்கே, பகவத்பாதரின் அருளுரையிலுள்ள உறுதிப்பாடு கவனிக்க வேண்டியதொன்று ஆகும். நந்ததி என்று மும்முறை கூறியதோடு அல்லாமல், நந்தத்யேவ என்று ஆனந்தம் அடையவே செய்கிறான் என்னும் தொனியில் அறைந்து கூவுகிறது கடைசிப் பகுதி. யோகி, போகி, ஏகாங்கி என்னும் வேறுபாடுகள் பரப்பிரம்ம நிலையில் நிற்பதில்லை.

बाह्यस्पर्शेष्वसक्तात्मा विन्दत्यात्मनि यत् सुखम् : ।

स ब्रह्मयोगयुक्तात्या सुखमश्नुते ।।

**பாஹ்யஸ்பர்ஸேஷ்வஸக்தாத்தா விந்தத்யாத்மநி யத் ஸுகம் ।**

**ஸ ப்ரம்மயோகயுக்தாத்மா ஸுகமஸ்நுதே ।।**

குறைவில்லா ஆனந்தம் பெறுகிறவன் பிரம்ம நிலையில் மனத்தைப் பொருத்தி நிறுத்தியுள்ளவன் என்கிறார் கீதாசாரியன். வெளித் தொடர்புகளில் உள்ளத்தைப் பறிகொடுக்காதவன் ஆத்மாவில் இன்பம் அனுபவிக்கிறான். பிரம்ம நிலையில் பொருந்திய மனதை உடையவன் தெவிட்டாத இன்பம் நுகர்கிறான். இந்தக் குறைவிலா ஆனந்தமே பிரம்மானந்தம் என்னும் மெய்யின்பம் ஆகும். சிவானந்தத்தில் மூழ்கி நிற்பன அக்ஷய ஸுகம் என்பதற்கு இணையாகத்தான் ஆசார்யர் மூன்று நந்ததி கூறுகிறார்.

**கீழோர்க்கு முக்தி எது?**

பரம் பொருள் உணர்வு கைகூட வேண்டும். ஆத்மஞானம் அல்லா மட்டில், கடைத்தேறுவதற்கான வழி ஏதுமே இல்லை. இந்த உண்மையைக் கூற வரும் இடத்து, ஆதிசங்கர பகவத்பாதர் வெகு எரிச்சலோடு நூறு தரம் பிறப்பு எடுத்தால்தான் என்ன, ஒரு பயனும் இராது என்பது போலச் சொல்கிறார். எத்துணை முறை செத்துச் செத்துப் பிறப்பெடுத்தாலும் ஞானமில்லாதவன் மேல் கதியை அடைய மாட்டான். இத்தனைக்கும் அவன் செய்திருக்கும் புண்ணிய காரியங்கள் எவ்வளவோ இருக்கலாம். கங்கை கடலில் கலக்கும் கட்டத்திற்குப் போய்க் கடலாடியிருப்பான்; விரதங்களை

மேற்கொண்டு தானம் செய்திருப்பான். ஆயினும், பரம்பொருள் அறிவு உண்டாகாவிட்டால் என்ன பயன்? காசியாத்திரை, சேது ஸ்நானம் வீணே !

कुरुते गङ्गासागरगमनं व्रतपरिपालनमथवा दानम् ।
ज्ञानविहीन: सर्वमतेन मुक्तिं न भजति जन्मशतेन ।।

**குருதே கங்காஸாகரகமநம் வ்ரதபரிபாலநமதவா தாநம் ।**
**ஜ்ஞாநவிஹீந: ஸர்வமதேந முக்திம் ந பஜதி ஜந்மஸதேந ।।**

இங்கே ஜ்ஞாநவிஹீந: என்பது ஆசார்யரின் வார்த்தை. கண்ணபிரான் தேவாஸுரஸம்பத்விபாக யோகத்தில் மூடர்கள் मूढा: என்ற சொல்லை ஆள்வார்.

आसुरीं योनिमापन्ना मूढा जन्मनि जन्मनि ।
मामप्राप्यैव कौन्तेय यान्त्यधमां गतिम् ।। (16-20)

**ஆஸுரீம் யோநிமாபந்நா மூடா ஜந்மநி ஜந்மநி ।**
**மாமப்ராப்யைவ கௌந்தயே ததோ யாந்த்யதமாம் கதிம் ।।**

முன்பு கூறிய ஜன்மசதப் பேச்சு, இங்கே பகவான் வாக்கிலும் வருகிறது. ஜந்மநி ஜந்மநி என்று இரண்டு தரம் சொல்லிக் கண்ணபிரானும் அறிவிலிகளின் ஒரு பயனுமில்லாப் பிறப்பைச் சாடுகிறார்.

அசுர யோனிகளில் வீழ்ந்து மீண்டும் மீண்டும் பிறப்பெடுக்கும் மூடர்கள் இறைவனை அடைவதே இல்லை. வரவரக் கீழ்நோக்கியே சென்று கொண்டிருப்பவர்கள் அசுரப்பிறவிகள். இந்த ச்லோகத்தில் கண்ணபிரான் ஆண்டுள்ள சொற்கள், பஜகோவிந்தத்து வாக்கியமான புநரபி ஜநநம், புநரபி மரணம், புநரபி ஜநநீஜடரே ஸயநம் என்பதை நினைவூட்டுவனவாக உள்ளன.

கீழோர், அசுரப் பிறப்புகள், மூடர்கள் - இவை யாவும் பரம்பொருளை உணரவொண்ணாத அறிவிலிகளுக்கு வேறு பெயர்கள் போலும். சங்கரரே பஜகோவிந்தம் 26-ஆம் ச்லோகத்தில், ஆத்ம ஞானம் அற்றவர்களை மூடர்கள் என்று அழைக்கிறார். அந்த மூடர்கள் நரகத்தில் இடர்ப்படுகிறார்கள் என்றும் கூறுகிறார்.

आत्मज्ञानविहीना मूढास्ते पच्यन्ते नरकनिगूढा ।

**ஆத்மஜ்ஞா நவிஹீநா மூடாஸ் தே பச்யந்தே நரகநிகூடா: ।**

அந்த மூடர்கள் தாம் அசுரர்களும்

**வீண்வாதம் ஏன்?**

சங்கரர் ஸோபான பஞ்சகத்தில், பயனில்லாத அறிவியல் தர்க்கங்களைத் தவிர்க்குமாறு கூறுவார். दुस्तर्कात् सुविरम्यताम् துஸ்தர்க்காத் ஸ்விரம்யதாம் என்பது மூன்றாம் ச்லோகத்தில் வரும் ஓர் அருளுரை. வீண்வாதங்களில் ஈடுபட வேண்டாம் என்று கூறியபின் மீண்டும் கடைசி அடியில் திரும்பச் சொல்கிறார்.

बुधजनैर्वाद: परित्यज्यताम् ।।


**புதஜநைர் வாத: பரித்யஜ்யதாம் ।**

இதன் பொருள் : அறிவு மிக்கோருடன் எதிர்வாதத்தைத் தவிர். இதைப் போலவே, பஜகோவிந்தம் முதல் ச்லோகமும் இலக்கண சாத்திரத்தை இறக்குவது போலப் பேசுகிறது.

(தொடரும்)

ஸ்ரீ சந்திரமௌலீஸ்வராய நம:

## ஸ்வர்ண ரத சேவா



ஸ்ரீ மடத்தில் ஸ்வர்ண ரத சேவை ஸ்ரீ மஹா ஸ்வாமிகள் பிருந்தாவனத்தில் ப்ரதி மாதம் கீழ்கண்ட நக்ஷத்ரங்களில் நடைபெறும்

♦ அனுஷம் ♦ மூலம் ♦ உத்ராடம் ♦ அவிட்டம்

இந்த சேவையில் ரூபாய் 1000 செலுத்தி உபயதாரர்களாக கலந்துகொள்ள விரும்பும் பக்தர்கள் ஸ்ரீமடம் அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புக்கு:**

ஸ்ரீமடம் மேனேஜர் - 044 - 27222115, 27222707, 27224236

இப்படிக்கு,
ஸ்ரீமடம் நிர்வாகம்

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி

புலவர் மா. வெங்கடேசன்



இவ்வாறே 1989ல் நடந்த மன்றத்தின் 12ஆம் ஆண்டு விழாவிலும் புலவர்களுக்கு எல்லாம் பெரியவாளின் அனுக்ரஹம் சிறப்பாக நடந்தது. நாங்கள் தந்த மலர்க் கிரீடத்தையும் மலர் மாலையையும் ஒரு பக்கத்தில் வைத்து விட்டு இதை புதுப்பெரியவாளுக்குப் போடுங்கள்' என்று கூற நாங்கள் மிகவும் வேண்ட அவைகளை அணிந்து காட்சி அளித்தார்கள். கண்கொள்ளா காட்சி! .

புலவர்களைத் தனித்தனியே வரவழைத்து குசலம் செய்த பின் அவர் 'நீங்கள் வெவ்வேறு விஷயம் பற்றி கவி பாடணும், என் சந்தோஷத்துக்காகத்தான் இது. சிவபெருமானைப் பற்றி கவிதை செய்யுங்கள்'என்று பணித்தார். புலவர்கள் யாவரும் மகிழ்ச்சியுடன் 4 முதல் 8 வரிக்குள் 10 நிமிஷங்களில் கவிதைகள் எழுதி விட்டனர். அதை படித்தும் காட்டினர். எல்லாவற்றையும் கேட்ட மகான் தேவாரம், திருவாசகம் மாதிரி உங்கள் பாடல்கள் நன்றாக இருந்தன. இது மாதிரியே ஸ்வாமி பேரில் ஸ்தோத்ரம் பாடி வந்தால் உங்கள் யாருக்கும் துக்கம் வராது என்று கூறி பழங்களை புலவர்களுக்கு தந்து தன் இரு கைகளாலும் ஆசீர்வாதம் செய்து அருளினார்கள். புலவர்களின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.

10 நாட்களுக்குப் பின் பெரியவர் என்னை அழைத்து புலவர்களின் கவிதைகளை எடுத்து வைச்சிருக்கியா? அவைகளை சின்ன புஸ்தகமா போட்டு சிவராத்ரி வழி பாட்டுக்கு வரும் எல்லாருக்கும் தரணும் செய்வியா? என்றார். நான் உத்தரவு படி

*செய்யறேன். இன்னிக்கி ராத்ரிக்குள்ள அச்சு போடுவாங்களா என்பது சந்தேகம்' என்றேன். எல்லாம் போடுவா போய்க் கேளு 'என்றார். காலை 9 மணி துரை அச்சகத்திடம் சென்றேன். விஷயத்தைச் சொன்னேன். அவர்கள் பார்த்துவிட்டு இன்றைக்கே இது முடியாது. குறைந்தது 3 நாட்கள் ஆகும் என்றனர். பெரியவா எல்லாம் போட்டுக் கொடுப்பா போய் கேளு என்று சொன்னதைச் சொல்லி வற்புறுத்தினேன். அவர்களும் கூடுதலாக பணியாட்களை அமர்த்திச் செய்கிறோம் என்றார்கள்.*

*(தொடரும்)*


# ''ஸ்ம்ருதி முக்தாபலம்'' என்னும் வைத்தியநாத தீக்ஷிதீயம்

*அரிய தர்மசாஸ்திர புத்தகத் தொகுப்பு எளிய தமிழ் உரையுடன் வெளியிடப்பட்டுள்ளது.*

1. வர்ணாஸ்ரம தர்மகாண்டம், 2. ஆஹ்னிககாண்டம் பூர்வபாகம், 3. ஆஹ்னிக காண்டம் உத்தரபாகம், 4. ஆசௌச காண்டம், 5. ஸ்ராத்தகாண்டம் பூர்வபாகம், 6. ஸ்ராத்த காண்டம் உத்தரபாகம், 7. திதிநிர்ணயகாண்டமும் ப்ராயச்சித்த காண்டமும் என்ற 7 பாகங்கள் சேர்த்து மிகக்குறைந்த விலையில் கிடைக்கப் பெறுகின்றது. ஆஸ்திக அன்பர்கள் அனைவரும் வாங்கி பயன் பெறலாம்.



ஏழு தொகுதிகள் அடங்கிய ஒரு செட் விலை 2500

கூரியர், தபாலில் பெற மேலும் 500 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்

தொடர்பு கொள்ளவேண்டிய அலைபேசி எண்கள்

**குறிப்பு :**

**இந்தத் தொகுப்பு ஸ்ரீ மடம் புக் ஸ்டால் மற்றும் ஸ்ரீ பெரியவாள் முகாமிலும் கிடைக்கும்**

# புராணக் கதை

காஞ்சி வாதூலன்

ஒரு சில நிகழ்ச்சிகள் நடப்பதற்குக் காரணம் தெரிவதில்லை. ஆனால் பின்னால் பெரிய நிகழ்ச்சிக்கு அது வித்திடும் என்று பீடிகை போட்டார் பொராணிகர். சிஷ்யன் எப்படி என்று கேட்க அவர் கூறலானார்.

ரேவந்தகன் சூர்ய குமாரன். அவன் ஒரு சமயம் விஷ்ணுவின் தர்சனத்திற்காக உச்சைஸ்ரவஸ் குதிரையில் எறி வைகுண்டம் சென்றான். தூரத்திலிருந்து அவன் வரவைப் பார்த்த லக்ஷ்மி ஆச்சர்யப்பட்டு சற்று மெய் மறந்தவளாக இருந்தாள். விஷ்ணு வாஞ்சையுடன் யார் வரவைப் பார்த்துக் கொண்டிருக்கிறாய் என்று கேட்க அவள் பதிலுரைக்கவில்லை. அது கண்டு விஷ்ணு என்னை மதிக்காமல் வேறு யாரையோ கவனித்து இருப்பதால் பூலோகத்தில் பெண் குதிரையாகப் போ என்று சபித்தார். அதிர்ச்சியான லக்ஷ்மி மன்னிப்பு கேட்டு மன்றாட அவரும் 'என்னைப்போல் ஒரு புத்ரன் உனக்குப் பிறக்க உன் சாபம் நீங்கும்' என்றார். தன்னுடைய நிலையும் அப்படி ஆகுமோ என்று பயந்து அங்கிருந்து ஓடினான் ரேவந்தகன்.

பெண் குதிரையாகப் பிறந்த லக்ஷ்மி யமுனையும் தமஸை நதிகள் கூடும் இடத்தில் ஒரு மனதாக மகாதேவரைக் குறித்து கடும் தவம் செய்தாள். மகாதேவரும் அவள் தவத்தை மெச்சி அவள் முன் தோன்றி 'நீ எதற்காக உன் கணவர் மகா விஷ்ணுவை விட்டு விட்டு என்னைக் குறித்து தவம் செய்தாய்.

இது அழகல்லவே ! 'என்று கூற மகாலக்ஷ்மி நீரும் அவரும் ஒருவரே என்பது தெரியும் உம்மை வணங்கினால் அவரை வணங்கியது போலத்தானே' என்று கூறி நடந்த சம்பவங்களைக் கூறினாள். மகாதேவரும் மகிழ்ந்து மகா விஷ்ணுவின் மூலமாகவே உனக்குப் புத்ரன் பிறப்பான். க்யாதி பெற்று விளங்குவான் என்று சொல்லி மறைந்தார். பின்பு அவர் மகாவிஷ்ணுவிடம் தகுந்த நேரம் வந்துவிட்டது என்று கூற அவரும் ஆண் குதிரை வடிவில் மகாலக்ஷ்மியிடம் வந்து சேர்ந்தார்.

இருவரும் சல்லாபிக்க அவள் ஒரு ஆண் மகவை ஈன்றெடுத்தாள். வந்த கார்யம் முடிந்தது இருவரும் வைகுந்தம் போகலாம் என்று மகா விஷ்ணு கூற புத்ர பாசத்தால் மயங்கிய

மகாலக்ஷ்மி புத்ரனை விட்டு வர மறுத்தாள். 'புத்ரனைப் பற்றிக் கவலை கொள்ளாதே யயாதியின் பேரன் புத்ரனுக்காக தவம் செய்கிறான். அவன் கையில் இந்த புத்ரன் போய்ச்சேருவான். அவனால் வளர்க்கப்பட்டு பெரும் புகழ் அடைவான். ஏக வீரன் என்னும் பெயர் கொண்டு ஹேஹைய வம்சத்திற்குத் தலைவனாவான், தேவியின் பக்தனாக விளங்குவான் என்று அவளைச் சமாதானப்படுத்தி வைகுந்தத்திற்கு அழைத்துச் சென்றார். இது தான் ஹேஹைய வம்சத் தோற்றம் என்று கூறி பௌராணிகர் கதையை முடித்தார்.

## வேத ரக்ஷண நிதிக்கு பணம் அனுப்ப வேண்டிய தகவல்கள்

**VEDA RAKSHANA NIDHI TRUST**

**ICICI Bank** T. Nagar, Chennai 17, A/C. No. 602 601205 431

**IFSC Code :** ICIC 0006026

**Bank of Baroda** A/C No. 05320100002089 IFSC CODE barb0chenbs

**Indian Bank,** West Mambalam A/C. No. 418622532 IFSC IDIB 000w005

**Canara Bank,** West Mambalam A/C No. 0917101041732 IFSC CNRB 0002616

**Indian Bank** Mutt Branch, Kancheepuram

A/C No. 411552514 IFSC IDIB b0005085

பண உதவி செய்பவர்கள் எவ்வளவு தொகை வேண்டுமானாலும் அனுப்பலாம். செலுத்துபவர் அவருடைய PAN NO ஐயும், கோத்ரம், நக்ஷத்ரம், செல் போன் எண் முதலியவைகளை ட்ரஸ்டுக்குத் தெரிவிக்கவும்.

# மகாபாரத சுருக்கம்

பாரதக் கதையை மூலம் மட்டும் சுருக்கமாக இங்கே தருகிறோம்.
**டாக்டர். வே. ராகவன்** - தொகுத்துத் தந்ததை தமிழில் மொழி பெயர்த்து அளிக்கிறோம். மொழி பெயர்ப்பாளர் : **ஜயவிஜயா**

மகேந்த்ரன் எவ்வாறு முருகனை சேனாதிபதியாக ஆக்கினானோ அவ்வாறே துர்யோதனன் தன் தம்பி மார்களுடன் த்ரோணாசார்யரை பீஷ்மருக்குப் பின் சேனாதிபதி யாக்கினான்.



அவனிடமிருந்து பதவி பெற்றபின் மஹாரதரான த்ரோணர் அவையின் நடுவில் துர்யோதனனிடம் கூறினார்.

துர்யோதனா எது வேண்டும் என்று நீ நினைக்கிறாய்? அதை செய்து முடிப்பேன் சொல்''.

துர்யோதனன் ' மிகச்சிறந்த வீரனான யுதிஷ்டிரனை உயிரோடு பிடித்து வாருங்கள். மீண்டும் அவரை சூதாட வைத்து,ஜயித்து அவருடன் அவர் தம்பி களையும் கானகம் துரத்துவேன். இது எனக்கு மகா வெற்றியைத் தரும்.'

த்ரோணர் 'மகா வில்லாளியான அர்ஜுனன் அவரைக் காப்பாற்றவில்லை எனில் யுதிஷ்டிரனை உயிருடன் பிடிப்பேன்.' அப்போது அவர் 'சக்ர வ்யூஹம்' என்னும் வ்யூகத்தை அமைத்து தகிக்கும் ஆதவன் போல் அதன் மத்தியில் ஒளிர்ந்தார்.

### அபிமன்யு யுத்தம்

யுதிஷ்டிரரின் ஆணைக்கு இணங்க அபிமன்யு அந்த வ்யூஹத்தை சின்னா பின்னமாக்கினான். அசாத்யமான இந்தச் செயலை செய்து முடித்தான். அந்தகன்

பாசத்தினால் மக்களைக் கொல்வதுபோல் அவன் ஆயிரக்கணக்கான வீரர்களைக் கொன்றான். அக்னி வன்னகளை அழிக்குமோ அப்படி ஒரு கோர தாண்டவத்தைச் செய்தான். அபிமன்யு ரண களத்தில் பத்தாய், நூறாய், ஆயிரமாய் எதிரிகளுக்குத் தெரிந்தான். அவனுடைய யுத்தத்தைக் கண்டு எல்லோரும் நடுங்கினர். இதைத் தடுக்க த்ரோணர், க்ருபர், கர்ணன், அஸ்வத்தாமன், ப்ருஹத்பலன், க்ருதவர்மன் என்னும் ஆறு பேர்கள் அவனைச் சூழ்ந்தனர்.

## அபிமன்யு வதம்

மூன்று பாணங்களால் அவனைத்தாக்கிய சகுனி 'இவன் நமக்கு எமன். நம்மை இவன் கொல்லும் முன் இவனை நாம் கொல்வோம்' என்றான். அபிமன்யு இதன் நடுவில் சக்ர வ்யூஹத்தை உடைத்துக் கொண்டு உள்ளே முன்னேறினான். அவன் தாக்குதலைத் தாங்க முடியாத கர்ணன் 'அபிமன்யுவின் தாக்குதல் உக்ரமாயுள்ளது, நான் தள்ளி நிற்கிறேன்' என்றான். த்ரோணர் 'கர்ணா இவன் மகா சூரன். அவனுடைய கவசம் துளைக்க முடியாதது. இளைஞன், விரைவான வாள் வீச்சு, லாகவமான போர் தந்த்ரம் இவைகள் உள்ள வரை நமக்கு ஜயமில்லை. தேவர்களாலும் இவனை ஜெயிக்க முடியாது. இவன் வில்லை உடை, தேரை நாசமாக்கு. பின்புறமாகத் தாக்கு'

அவர் கூறியபடியே கர்ணன் பின்புறமாக அவன் வில்லை உடைத்தான். த்ரோணர் அவன் புரவிகளைக் கொன்றார். க்ருபர் அவனுடைய இரு ரத்யர்களைக் கொன்றார். அந்த ஆறு வீரர்களும் உடனடியாக அபிமன்யுவை சூழ்ந்து கொண்டனர். அவன் வில்லும், தேரும் இல்லாமல் தனியாக நின்றான்.

உடல் முழுதும் அம்புகளால் அடிக்கப்பட்ட அபிமன்யு வாளை சுழட்டியபடி த்ரோணரைத் தாக்கினான். முள்ளம்பன்றி போல் தோற்றத்துடன் கதயுதம் ஒன்றை எடுத்துக் கொண்டு வீரமாகப் போர் புரிந்தான். அப்போது துச்சாசனனின் புத்ரன் அரக்கன் போல் அவன் மீது போர் செய்தான். அவனால் உக்ரமாகத் தாக்கப்பட்ட அபிமன்யு கீழே விழ அவன் தலை மீது கதையால் தாக்கினான். அதனால் தனி ஒருவனாக ஆறு பேர் சூழ ரன களத்தில் மடிந்தான் அபிமன்யு. அந்தோ! ஆவன் வீழ்ச்சியைக் கண்ட அந்த ஆறு பேரும் பெரும் உவகை அடைந்தனர். வெற்றி கோஷமிட்டனர். ஆர்ப்பரித்தனர். ஆனால் அதே சமயம் வானத்தில் ஒருவனாக தனி ஒருவனாக இதோ அபிமன்யு இந்த ஆறு பேர்களால் கொல்லப்பட்டான். அந்தோ! இது அதர்மம் இது அதர்மம் ' என்று குரல் ஒலித்தது.

# ஸனாதன தர்மம் :

ரா ஸ்ரீ




287. **கேள்வி** : அத்யாத்ம யோகம் விளக்கம்

**பதில்** : வெளி விஷயங்களிலிருந்து மனதைத் திருப்பி ஆத்மாவிடம் செலுத்துவது அத்யாத்ம யோகமாகும்

288. **கேள்வி** : ஆத்மாவை அறிபவர் யார்?

**பதில்** : ஆசை நீங்கியவரே ஆத்மாவை அறிந்து கொள்பவர்.

289. **கேள்வி** : அதை எங்கனம் அறிவது?

**பதில்** : புற விஷயங்களில் மனதைச் செலுத்தாது ஆத்மாவையே நினைத்திருந்தால் அது தன்னைக் காட்டிக் கொடுக்கும்.

290. **கேள்வி** : அந்த அறிவுக்கு அதிகாரி யார்?

**பதில்** : பாப கர்மங்களை விட்டவனும் இந்த்ரியங்களை வெளியில் அலைய விடாமல் மனதை ஒருமுகப்படுத்துபவனுமே அதிகாரி.

291. **ஆத்மாவின் லக்ஷணம் எது?**

பிறவாதது, இறவாதது, தேயாதது, வளராதது, அழியாதது, சலனமில்லாதது.

292. **கேள்வி** : ஜீவாத்மாவும் பரமாத்வாவும் வெய்யிலும் நிழலும் போல என்பதன் பொருள் என்ன?

**பதில்** : உண்மையில் வெய்யில் வேறு நிழல் வேறு அல்ல. வெய்யிலின் தடை நிழல். வெய்யிலுக்கு உள்ள தடை நீங்கினால் வெய்யிலும் நிழலும் ஒன்றாகிவிடும். அது போல் வெய்யில் பரமாத்மா. அது பற்றிய அறியாமை நீங்கினால் நிழலாக இருக்கும் ஜீவாத்மா அதோடு ஒன்றாகிவிடும்.

293. **கேள்வி** : ஜீவாத்மாவை எப்படி கூறுவர்?

**பதில்** : சரீரம், தேர், புத்தி, தேரோட்டி, மனது கடிவாளம், இந்த்ரியங்கள் குதிரைகள் ஜீவாத்மாவை தேரில் உள்ள யஜமானன் 'ரதீ' என்பர். எல்லவற்றையும் இவன் அனுபவிப்பதால் 'போக்தா' என்பர்.

294. **கேள்வி : வைஷ்ணவ பதம் என்றாலென்ன?**

**பதில் :** வாஸுதேவாத்மகம் என்று கூறுவர். அனைத்து ஸம்சார பந்தங்களிலிருந்தும் விடுபட்டு முக்தி அடைந்து உயர்ந்த பதவியை அடைவதை வைஷ்ணவ பதம் என்பர்.

295. **கேள்வி** : பரம பதம் என்பது என்ன?

**பதில் :** எங்கு சென்றால் திரும்பி வர வேண்டியதில்லையோ அதுதான் பரம பதம் எனப்படும். பகவான் எங்குமிருப்பவர். அவர் வேறு, நாம் வேறு என்பது அறியாமை. இது அகல பேத அறிவு மறைய அவரே நாம் என்னும் உண்மை அறிவு தோன்றும். இதில் போக்கும் வரவுமில்லை. இதுவே பரம பதம்.

296. **கேள்வி** : ஆத்மா என்பது எது?

**பதில்** : சப்த, ஸ்பர்ச, ரூப, ஸ்பர்ச கந்தம் ஆகியவற்றிற்கு அப்பாற்பட்டது. மாறுபாடற்றது, ஆரம்பம் முடிவு இல்லாதது, நிலை பிறழாமல் இருப்பது எதுவோ அதுவே ஆத்மா.

297. **கேள்வி** : ப்ரத்யகாத்மா யார்?

**பதில்** : எல்லாவறிற்கும் உள்ளே இருந்து அனைத்து விஷயங்களையும் ப்ரகாசப்படுத்தும் சக்தி ப்ரத்யகாத்மா எனப்படும்.